Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Admission open
No Prior Qualifications
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only founation level Course fee
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1328) MCS Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 04 சனிக்கிழமை (17.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 168




பூமியை நேசிக்க 07


தீக்குளிப்பேன் 12


மாயா பெண் புலியா 13


தொடரும் தவறுகள் 14


## சதத்தில் சதமடித்த சச்சின்




இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச் சின் டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தனது 100 ஆவது சதத்தை நேற்று பூர்த்தி செய்தார்.

ஆசிய கிண்ணத்தொடரில் பங்களாதேஷுடனான நேற்றைய போட்டியின் போது 100 ஓட்டங்களைக் கடந்து இந்தச் சாதனையை அவர் பதிவாக்கினார். (15ஆம் பக்கம் பார்க்க)

# இறைமையுள்ள நாட்டின் மீது பலவந்தமாக தலையிட முடியாது

## ஜோன் ஹோம்ஸ் தெரிவிப்பு



(ஜெனீவா)

இறையாண்மையுள்ள நாடு ஒன்றின் உள்விவகாரங்களில் பல வந்தமாகத் தலையிடும் அதிகாரமோ அனுமதியோ ஐக்கிய நாடுகள் சபைக்கு கிடையாது என அதன் முன்னாள் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார். சனல்-4 தொலைக்காட்சி இலங்கை தொடர்பாக வெளியிட்டுள்ள புதிய வீடியோ படம் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் நிராகரிக்கப்படுகிறது. நிர்வாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தாமல், சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்படும் என்பதை எதிர்பார்க்க முடியாது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை மாத்திரமல்லாது வேறு சாட்சியங்கள் இருந்தபோதிலும், விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமாயின் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புகள் இருப்பது அவசியமாகும். ஐக்கிய நாடுகள் சபைக்கு இருக்கும் அதிகாரங்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட ஹோம்ஸ், மனித கேடயங்களாக விடுதலைப் புலிகள் வைத்திருந்த மக்களை, ஐக்கிய நாடுகள் சபையினால் விடுவிக்க முடியாது போனதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சர்வதேச சமூகம் இலங்கை தொடர்பில் ஐக்கியமான நிலைப்பாட்டில் (15ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வெளிநாட்டு ஆலோசனை அவசியமற்றது



## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும், புனரமைப்பு மற்றும் நல்லிணக்க செயற் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் வெளிநாட்டு தலையீடுகளோ அல்லது அவர்களின் அறிவுறுத்தல்களோ இந்நாட்டிற்கு அவசியமில்லை எனவும், பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின்போது ஒருபோதும் வெளிநாட்டு ஆலோசனைகளை நாடவோ வெளிநாட்டு துருப்புகளை ஈடுபடுத்தவோ இல்லை எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்துள்ளார்.

எமது வீரம்மிக்க படையினரால் மாத்திரம் உள்நாட்டில் வகுக்கப்பட்ட இராணுவ தந்திரோபாயங்களின்படி இந்த யுத்தத்தில் போரிட்டு வெற்றி காணப்பட்டது. அவர்கள் எமது தளபதிகளால் நெறிப்படுத்தப்பட்டனர். தனது சொந்த கொள்கைகள் மற்றும் செயற் திட்டங்களால் நாட்டை முன்னேற்றுவதற்கான ஆற்றலையும் வலிமையையும் அறிவையும் இலங்கை கொண்டுள்ளது.

இந்நாட்டை எவ்வாறு நடத்த வேண்டும், (15ஆம் பக்கம் பார்க்க)

## தலைக் கவசமின்றிய பயணம் குடும்பஸ்தரின் உயிர் பறிபோனது

(யாழ்ப்பாணம்)

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் விபத்தில் சிக்கி மரணமானார்.

கட்டுவன் பகுதியைச் சேர்ந்த செல்வத்துரை சிவஞானம் (வயது-55) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே மேற்படி சம்பவத்தில் மரணமானவராவார். (15ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களை தண்டிக்கவே பிரேரணை சமர்ப்பிப்பு

## அமெரிக்கா தெரிவிப்பு



(வொஷிங்ரன்)

இலங்கையில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் தண் டனை பெற வேண்டும் என்பதற்காகவே ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் பிரேரணை கொண்டு வரப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலன்ட் கூறியதாவது,

சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள வீடியோ விவகாரத்தில் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் தொடர்பாக என்னால் தெளிவாக உறுதிப்படுத்த முடியவில்லை. இருந்தாலும் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டமீறல் போர்க்குற்றச்சாட்டுகள் குறித்த கருத்துக்களை பலமுறை வெளிப்படுத்தியுள்ளோம். (15ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்குற்ற ஆதாரங்கள் மீளவும் வெளிவந்துள்ளன

## என்கிறது பிரிட்டன்



(லண்டன்)

சனல்-4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்ட இலங்கையின் கொலைக் களங்கள் - தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் எனும் ஆவணப்படம் இலங்கையில் இடம்பெற்றதாகக் கருதப்படும் போர்க்குற்றங்கள் குறித்த முக்கிய ஆதாரங்களை மீண்டும் சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

இதன் மூலம் இறுதிப்போரில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைக்கு ஆதரவாக, முக்கியமான சாட்சியங்கள் வெளிவந்துள்ளதாக பிரித்தானியா வின் பொதுநலவாய அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் தெரிவித்துள்ளார்.போர் முடிவடைந்த காலத்திலிருந்தே இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து சுயாதீன்மான சர்வதேச விசாரணை (15ஆம் பக்கம் பார்க்க)

# இ.போ.ச. ஊழியரின் பணிப்பகிஷ்கரிப்பு பல்வேறு தரப்பினரும் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் தொழிற் சங்கப் போராட்டம் காரணமாக யாழ்.நகரிற்கும் ஏனைய இடங்களுக்குமான அரச போக்குவரத்துச் சேவை நேற்று முற்று முழுதாக ஸ்தம்பிதடைந்து காணப்பட்டது. இதனால் மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் பெரும் அசௌகரியங்கரியத்திற்கு உள்ளாகினர்.

நாடு பூராகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் சம்பள அதிகரிப்புக் கோரி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே நேற்றைய தினம் யாழ். மாவட்டத்திலும் இந்த தொழிற்சங்கப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து நாட்டில் எந்தவொரு பகுதிக்குமான பய



ணிகள் போக்குவரத்துச் சேவை எதனையும் நடத்தாது ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் யாழ்.மத்திய பேருந்து நிலையம் உட்பட (15ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைகள் தொடர்பில் அழுத்தம் பிரயோகிப்பது அழகல்ல

## ஜப்பான் தெரிவிப்பு

(ஜெனிவா)

மனித உரிமைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட இருதரப்பும் அல்லது சம்பந்தமுள்ள அனைத்துத் தரப்புகளுடன் இணைந்து செயற்பட வேண்டுமே தவிர, மனித உரிமைகள் பேரவை ஊடாக குறித்த நாட்டின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடாது என ஐக்கிய நாடுகள் சபைக்கான ஜப்பானிய தூதுவர் சகிசிகா ஒசாமோ தெரிவித்துள்ளார். ஜெனிவா மாநாட்டில் நேற்று உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மனித உரிமை விடயத்தில் உலகின் எந்த ஒரு நாடும் நூறு சதவீதம் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை எனவும் அவர் அங்கு கூறியுள்ளார். இதன் அடிப்படையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் மேற் கொள்ளும் போது, அழுத்தம் பிரயோகிக்கப்படுமாக இருந்தால், (15ஆம் பக்கம் பார்க்க)

# கைதடி சிறுவர் இல்லம் மீண்டும் நேற்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் உள்ள சிறுவர் இல்லம் புனரமைப்பு செய்யப்பட்டு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மேற்படி சிறுவர் இல்லத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

63 இலட்சம் ரூபா செலவில் இந்த சிறுவர் இல்லத்தினை புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் குறித்த சிறுவர் இல்லத்தில் பராமரிப்பு குறைபாடு காரணமாக 2 குழந்தைகள் உயிரிழந்தனர்.

அதற்கான காரணங்கள் ஆராயப்பட்ட வேளை கைதடி சிறுவர் இல்லம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் மூடப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் இந்த சிறுவர் இல்லம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அங்கு பராமரிக்கப்படும் 21 குழந்தைகளுக்கு 7 பாதுகாப்பாளர்களே இருக்கின்றனர். ஆளணிப் பற்றாக்குறையாக இருக்கும் இந்த சிறுவர் இல்லத்தில் குழந்தைகளின் எண்ணிக்கை நாளாந்தம் கூடிச்செல்வதை அவதானிக்க முடிகின்ற வேளையில் இந்த சிறுவர் இல்லத்தில் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை ஆளுநர் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கிறது. (எஸ்)

# மின்வெட்டு பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் 19.03.2012 திங்கட்கிழமை 21.03.2012 புதன்கிழமை, 23.03.2012 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

20.03.2012 செவ்வாய்க்கிழமை, 22.03.2012 வியாழக்கிழமை, 24.03.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டார் தெரு, ஓட்டுமடம், ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

25.03.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கச்சேரி, அரியாலைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.


# மலிவு விலையில் சேதனப் பசளை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவிவரும் இயற்கைப் பசளைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையும் விலையேற்றத்தையும் கருத்திற்கொண்டு பொதுமக்களினதும் விவசாயிகளினதும் நன்மை கருதி யாழ். மாநகரசபையின் உர உற்பத்தி நிலையத்தில் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த பயனளிக்கக்கூடிய சேதனப்பசளையை விற்பனை செய்ய மாநகரசபை முன்வந்துள்ளது.

பூச்செடிகள் முதல் மரக்கறிப் பயிர் ஆகியவற்றுக்கு பயன்படுத்தக்கூடிய இச்சேதனப்பசளையை மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்ய மாநகர சபை தீர்மானித்துள்ளது.

ஒரு கிலோ - 10 ரூபா, 5 கிலோ - 45 ரூபா, 10 கிலோ - 110 ரூபா, 25 கிலோ - 250 ரூபா ஆகிய விலைகளின் படி மாநகர சபை எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணியிலிருந்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



எமது தாய்நாடு பாதுகாக்கப்படவேண்டுமென வேண்டி யாழ். பெரிய பள்ளிவாசலில் நேற்று இடம்பெற்ற ஜும்மா பிரசங்கத்தில் கலந்துகொண்டோரையும் அல்ஹாஜ் மௌலவி கலீல் விசேட உரையாற்றுவதையும் காணலாம். (105)

# முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கடந்த 2011 மற்றும் 2012 காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் அரச உத்தியோகத்திற்கு உள்வாங்கப்பட்டவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில், புதிதாக இணைக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகத்தினை வழிப்படுத்துவது எவ்வாறு என்பது பற்றிய விளக்கங்களை அளிப்பதற்காகவே இப்பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருந்தும் சுமார் 500 இற்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் இம்முகாமைத்துவப் பட்டறையில் கலந்துகொண்டனர். அத்துடன் இந்நிகழ்வில், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்கள் உட்பட திட்டப் பணிப்பாளர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கில் மட்டும் 3000 பேருக்கு முகாமைத்துவ உதவியாளர் நியமனம்

## வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் 3000 பேர் முகாமைத்துவ உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய இளம் சமுதாயத்தினர் எதிர்காலத்தில் நல்ல ஆளுமைமிக்கவர்களாக வளர வேண்டும். இளம் சமுதாயத்தினர் ஆளுமை மற்றும் திறமை உள்ள சந்ததியினராக உருவாக வேண்டும். எந்த எதிர்பார்ப்புக்களும் இன்றிச் செயற்பட வேண்டிய பொறுப்பு எமக்கு உருவாக வேண்டும்.

நம் செயற்பாடுகளை செயற்படுத்தும் போது நேரத்தினைக் கவனத்தில் கொள்ளாது நமது வேலைகளை செய்ய வேண்டும். நல்ல பிரஜையாக உருவாக வேண்டும் இதுதான் என்னுடைய விருப்பமும் என்றார். (எஸ்)

# ஒசுசலவில் இலவச மருந்து பெறமுடியவில்லை

(யாழ்ப்பாணம்)

துணை மருத்துவ உத்தியோகத்தர்களின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக அரச வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்காக வழங்கப்பட்ட மருந்து சிட்டைகளுக்கு அரச ஒசுசலவில் இலவசமாக மருந்து விநியோகிக்கப்படும் என கூறப்பட்டபோதும் யாழ். நகரிலுள்ள ஒசுசலவில் அவ்வாறு வழங்கப்படவில்லை.

இது குறித்து அங்கு பணியாற்றுபவர் ஒருவரிடம் கேட்டபோது அரச வைத்தியசாலை மருந்து சிட்டையுடன் வருபவர்களுக்கு இலவசமாக மருந்து வழங்கும்படி தமக்கு எந்தவித அறிவித்தலும் கிடைக்கவில்லை என்றார். (54)

# விதிகளை மீறிய சிகிச்சை நிலையம் உரிமையாளர்களுக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மற்றும் புறநகர் பகுதியில் இயங்கும் எட்டு பல் வைத்திய நிலைய உரிமையாளர்களை தலா 30 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

நேற்று முன்தினம் சுகாதார சேவைகள் பணிமனையும் பொலிஸாரும் இணைந்து யாழ். நகர் மற்றும் புறநகர் பகுதியில் இயங்கும் பல் வைத்திய நிலையங்களை பரிசோதனைக்குட்படுத்தியவேளை குறித்த எட்டு பேரும் பிடிக்கப்பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

மேற்படி வழக்கை விசாரணை செய்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா பல் வைத்திய நிலைய உரிமையாளர்கள் எட்டுப் பேரையும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையில் செல்ல உத்தரவிட்டதுடன், வழக்கினை ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (எஸ்)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காக ஒரு இலட்சம் ரூபா நிதியினை வழங்கிய கௌரவ மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

அவர்களுக்கும் **கந்தசாமி கமலேந்திரன்** (ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர்) அவர்களுக்கும் ஈ.பி.டி.பி. வலி.வடக்கு அமைப்பாளரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான **இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் (அன்புத்தோழர்)** அவர்களுக்கும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் **செல்லப்பா திருஞானம்** அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

கோவில் வீதி,
மல்லாகம். (R/122)

வாழ்த்துவோர் :
ஞானவைரவர் ஆலய
பரிபாலன சபையினர்.

## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1326)

### கணினி திருத்தம்
(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1327)


# ஆபாசப்படம் பார்த்தவருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

தனது கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படம் பார்த்த நபரை பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

யாழ். நகரப் பகுதியில் வைத்து ஆபாசப்படம் பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரினால் இந்த நபர் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மேற்படி வழக்கு சம்பந்தமாக நேற்று சட்டத்தரணி மு.றெமிடியஸினால் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. விண்ணப்பத்தினை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு இணங்க கடுமையாக எச்சரிக்கப்பட்டு 3 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணையில் செல்ல அனுமதித்து தீர்ப்பளித்தார். (எஸ்)

உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் உங்களையும், என்னையும் போன்ற மனிதர்களே. வீரம் மட்டும் இருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதனையும் செய்து முடிக்க முடியும். - விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## ஜெனீவா மாநாடும் முடிந்த பிறகு என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்களது அரசியல் திட்டத்தையோ தீர்வுக்கான அணுகுமுறைகளையோ வெளிப்படையாகத் தெளிவாக முன்வைக்க முடியாமல் தத்தளித்து வருவதற்கான காரணங்கள் ஏற்கனவே தெரிந்தவைதான். அவர்களுக்குள்ளாக நடந்து கொண்டிருக்கும் குடுமிப்பிடிச் சண்டைகளின் சத்தத்தை அரச எதிர்ப்பு ஆவேசப் பேச்சுக்களின் இரைச்சலுக்குள் அமுக்கிவிடுவதே அவர்களது பிரதான உத்தி.

ஆனால் அரச எதிர்ப்புப் பேச்சுக்களையும் உரத்துச் சொல்லவிடாத வெளிநாட்டு சக்திகளின் அழுத்தம் வரும்போது, அவர்களுக்குள்ளேயே வெடித்துக் கிளம்பும் அறிக்கைப் போரும் தனித்த ஓட்டங்களும் உள் அசிங்கங்களைச் சந்திக்குக் கொண்டுவந்து விடுகிறது.

ஜெனீவா மாநாட்டைத் தமிழ்த் தரப்பு எவ்வாறு கையாள வேண்டும் என்ற கேள்வி வந்தபோது, கூட்டமைப்புத் தலைமை அதாவது சம்பந்தரும் சுமந்திரனும், ஜெனீவா போக வேண்டாம் என்ற அமெரிக்க ஆணையைச் சிரமேற்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இதை எதிர்த்து முதலில் கூட்டமைப்புக்குள்ளிருக்கும் தமிழரசுக் கட்சிக்கு எதிரான சுரேஷ் குழுவினர் பகிரங்கமாகவே கண்டனங்களைத் தெரிவித்தனர்.

தமிழரசுக் கட்சிக்கு எதிரான கூட்டமைப்புக் குழுவின் இணையத் தளங்கள், இப்போதுள்ள கூட்டமைப்பு துரோகப் பாதையில் வீழ்ந்து விட்டதென்றும், தமிழ்த்தரப்பில் இனி தீவிரத் தேசியர்களைக் கொண்ட புதிய கூட்டமைப்புக்குத் தேவை எழுந்துள்ளதாகவும் எழுதின. இந்த உள்முரண்பாட்டின் உச்சமாக கூட்டமைப்பிலுள்ள ஒரு குழுவுக்கெதிராக மற்றைய குழு கொடும்பாவி கட்டித் தமிழ்த்துரோகிகள் என்று எழுதித் தொங்கவிட்டது.

தாங்கள் துரோகிகள் என அறிவிக்கப்படுவது, கூட்டமைப்பின் தலைமைக்கோ அதனுள்ளிருக்கும் முன்னாள் ஆயுதந்தரித்த கலகக் குழுவுக்கோ புதிதல்ல. துரோகி எனும் சுருள்வாளைக் கையிலெடுத்ததும் அவர்களே, வீச்சுத் தப்பும் போதெல்லாம் தங்கள் கழுத்திலேயே வெட்டு விழுத்திக் கொள்வதும் அவர்களே!

ஆனால், ஜெனீவா போகாமல் விட்டது தவறு என்ற கூட்டமைப்புக்குள் எழுந்த குரல், தமிழரசுக் கட்சியின் எதிர்க் குழுவிடமிருந்து மட்டுமல்ல. தமிழரசுக் கட்சியோடு லாபம் கருதிக் கடைசியாக ஒட்டிக் கொண்ட எம்பிக்களும் ஜெனீவா போவதில்லை என்ற சம்பந்தன்– சுமந்திரன் கூட்டின் முடிவுக்கெதிராக உள்ளுக்குள்ளேயே பொங்கினார்கள். வெளியே காட்டிக் கொண்டால், தாங்களும் கூட்டமைப்புக்குள்ளிருக்கும் "மண்டையன் குழு"வாகப் பார்க்கப்படலாம் என்ற அச்சத்தில் அவர்கள் பேசவில்லை. ஆனால் இந்த விஷயத்தில் தலைமையின் உத்தரவையும் மதிக்கவில்லை.

கூட்டமைப்பின் லேபிளும் புலம்பெயர் தீவிரத் தேசியர்களின் ஆதரவும் இருந்தால்தான் அடுத்தமுறை எம்பி பதவிக்கு உத்தரவாதம் என்ற ஞானோதயம் கொண்டவர்களே ஜெனீவா போகாத முடிவு கூட்டமைப்புத் தலைமையின் தமிழ்த்துரோகம் என்று சொல்லிக் கொண்டே கூட்டமைப்பில் ஒட்டிக் கொண்டுமிருக்கிறார்கள்.

தலைமையை மீறி ஜெனீவா சென்றால், அதைச் சாக்காக வைத்து கூட்டமைப்பிலிருந்தே வெளியேற்றி விடுவார்கள் என்பது தெரிந்த சுரேஷ், ஊடகங்களினூடாக கூட்டமைப்புத் தலைமையைச் சாடுவதோடு நின்றுவிட்டார். ஆனால், புலம்பெயர் ஆதரவை நம்பும் மற்றொரு கூட்டமைப்பு எம்பியான சிறீதரன், லண்டன் போவதாகத் தலைமையிடம் போக்குக் காட்டிவிட்டு, ஜெனீவா சென்று புலம்பெயர் எதிர்ப்பாளர்களுடனும் முகத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார் என்று கூட்டமைப்பின் உள்ளெதிர் இணையத்தளங்கள் சாடியுள்ளன.

தலைமையின் கட்டுப்பாட்டை மீறி ஜெனீவா சென்றிருக்கும் சிறீதரன் எம்பி மீது கூட்டமைப்புத் தலைமை என்ன ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறது என்றும் கேள்வி எழுப்பியுள்ளன. தனிப்பட்ட காரணங்களுக்காகக் கூட இச்சமயத்தில் ஜெனீவா செல்ல வேண்டாம் என்ற அமெரிக்க ராஜதந்திரியின் அறிவுரையை மீறி, கூட்டமைப்பை இக்கட்டில் சிறீதரன் எம்பி மாட்டியிருப்பதாகவும் அந்தத் தளங்கள் குறிப்பிட்டுள்ளன.

இவர்கள் ஜெனீவா போவதோ போகாமல் விடுவதோ அல்ல தமிழ் மக்களின் பிரச்சினை, ஜெனீவா மாநாடும் முடிந்த பிறகு, நம் கதியை மாற்ற என்ன பேசப் போகிறார்கள் என்பதைத்தான் இவர்கள் மனசாட்சி தொட்டுச் சொல்ல வேண்டும். நமது பிரச்சினையில் இவர்களாக ஒரு முன் எட்டு வைப்பதற்கு ஏதாகிலும் திட்டமிருக்கிறதா என்பதையே இவர்கள் தெரிவிக்க வேண்டும்.

– ஆசிரியர்.

# மருத்துவ உதவியாளர் பகிஷ்கரிப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் "எக்ஸ்ரே" தொழில்நுட்பவியலாளர்கள், மருந்தாளர்கள், ஆய்வுகூட உதவியாளர்கள் தொடர்ந்தும் தமது பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

நாடு பூராகவும் அரச வைத்தியசாலைகளில் இணை மருத்துவ ஊழியர்கள் இவ்வாறு தமது ஊதிய உயர்வு, மேலதிகக் கொடுப்பனவு மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களது பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்பாக சுகாதார அமைச்சுடன் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததை அடுத்து அவர்கள் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர்கள் சிகிச்சைப் பிரிவிற்கு நோயாளர் பெருமளவு வருகை தந்திருந்த போதும்; அவர்கள் வைத்தியர்களால் பார்வையிட்ட போது மருந்து எடுக்கவோ, எக்ஸ்ரே பெறவோ, மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளவோ முடியவில்லை. இதனால் நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியதை அவதானிக்க. முடிந்தது.

மேலும் இவ்வைத்தியசாலையின் ஏனைய பிரிவுகள் வழமைபோல் இயங்கி வருவதனையும் அவதானிக்க முடிந்தது. (பா)

## சாவகச்சேரி பொதுச்சந்தையில் கடைத் தொகுதி அமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தையின் மேற்குப் பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் 52 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியொன்று கட்டப்படவுள்ளது.

இதற்குரிய வரைபடம் சாவகச்சேரி பொது நூலகத்திலும், காரியாலயத்திலும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. கடைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச நிர்வாக சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட வர்த்தகர்களிடம் இருந்து கடைகளுக்கான அனுமதி கோரப்படாத பட்சத்தில் சாவகச்சேரி தொகுதிக்கான வர்த்தகர்களின் கடைகளுக்கான கேள்வி கவனத்தில் கொள்ளப்படும்.

கடந்த யுத்த அனர்த்தத்திற்கு முன்னர் இப்பகுதியில் 36 கடைகளைக் கொண்ட கடைத் தொகுதி அமைக்கப்பட்டு இயங்கி வந்த நிலையில் இவை யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்து இவற்றை முற்றாக அகற்றி இங்கு புதிய கடைத்தொகுதியை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (11)

## பருத்தித்துறை பகுதியில் மின் வலு அதிகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேசத்தில் பருத்தித்துறை மின்சார சபையினரால் ஒரு அவத்தை மின்சாரத்தை மூன்று அவத்தை மின்சாரமாக மாற்றுதல் வேலைகள் நடைபெற்று வருகின்றது.

அதன் அடிப்படையில் குஞ்சர் கடை, கரணவாய் 1.3கிலோ மீற்றர் பகுதி 12 இலட்சம் பெறுமதியிலும், டி.ஆர்.ஓ- பொலிகண்டி பகுதியின் 600 மீற்றர் பகுதி 6 இலட்சம் பெறுமதியிலும், உடுப்பிட்டி சங்க வீதி 140 மீற்றர் பகுதி 1இலட்சம் 45 ஆயிரம் ரூபாவிலும், உடுப்பிட்டி சங்க முன் ஒழுங்கை 600 மீற்றர் பகுதி 5 இலட்சம் ரூபாவிலும், டிகிறி ஒழுங்கை புலோலி 500 மீற்றர் பகுதி 4 இலட்சம் பெறுமதியிலும் வேலைகள் இடம்பெற்று வருகின்றது.

இதன்படி ஒரு அவத்தை காலணி இடப்பட்ட மின்சாரக்கம்பியை 3 அவலத்தை காலணி இடப்பட்ட மின்சாரக் கம்பியாக மாற்றுவதன் மூலம் மின் மாறறியின் சுமை குறையும், மின் கம்கி வலு குறையும். இதன் மூலம் பாவனையாளர்கள் அதிக மின்சாரத்தைப் பயன்படுத்த முடியும் என பருத்தித்துறை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (116)

## ஆசிரியர் விபரம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப்பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களின் விபரங்களை தேசிய கல்வி நிறுவக ஆளணி அபிவிருத்தி முகாமைத்துவ பிரிவு வலயக்கல்வி பணிமனை மூலம் கோரியுள்ளது.

இந்த ஆசிரியர்களின் விபரங்களை உரிய படிவங்களில் தயாரித்து வலயக்கல்வி பணிமனைக்கு இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பயிற்றப்படாத நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கே இவ் விபரங்கள் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

## சமூக விஞ்ஞானப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள உடுவில், தெல்லிப்பளை, சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களிடையே வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் சமுக விஞ்ஞானப் போட்டிக்கு இவ் வருடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இப்போட்டி, பாடசாலை மட்டம், கோட்ட மட்டம் என இரு நிலைகளில் நடைபெறவுள்ளன. பாடசாலை மட்டப் போட்டிகள் பங்குனி மாதம் 20ஆம திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கப்பட்டு, கோட்ட மட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் 23ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி கோட்டக் கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அதிபர்கள் கேட்டுள்ளனர்.

பாடசாலை மட்டப்போட்டியில் அனைத்து மாணவர்களும் பங்குபற்றுவதை அதிபர் உறுதிப்படுத்தல் வேண்டும். பாடசாலை மட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெற்ற போட்டியாளர்களுக்கே கோட்டமட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதியுடையவராவர்.

கோட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி, நான்கு கோட்டங்களிலும் நடைபெறும். போட்டிகள் பின்வரும் நேர ஒழுங்கின்படியும், வகுப்பு ஒழுங்கின்படியும் அந்தந்தக் கோட்டங்களில் நடைபெறவுள்ளது.

இதன்படி தரம்-6, 7 மாணவர்களுக்கு மு.ப. 9 மணிக்கும், தரம்-8, 9 மாணவர்களுக்கு மு.ப. 10 மணிக்கும், தரம்-10, 11 மாணவர்களுக்கு மு.ப. 11.00 மணிக்கும் நடைபெறும் என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார். (06)

## திண்மக்கழிவு முகாமைத்துவம்; சாவகச்சேரியில் இயற்கைப் பசளை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை இயற்கைப் பசளையாக்கும் திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் பசளையாக்கும் செயற்பாடு சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

'பலிசலு' திட்டத்தின் கீழ் 6 மில்லியன் ரூபா செலவில் பசளையாக்கும் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளது. நகரசபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் இத்திட்டத்தின் கீழ் எரித்து அழிக்காது தரம் பிரிக்கப்பட்டு உக்காத கழிவுகள் பசளையாக்கப்படவுள்ளது.

இச்செயற்திட்டம் தென்பகுதியிலுள்ள 'பலிசலு' என்ற அமைப்பினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படவுள்ளதுடன் சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் அமைந்துள்ள இக்கட்டடத்திற்குச் செல்லும் வீதி ஒரு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதுடன், கட்டடம் அமைக்கும் பணிகள் முடிவடைந்ததும் பசளையாக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்படும்.

எனவே மக்களுக்கு இப்பசளை நியாய விலையில் வழங்கப்படும் எனவும் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (11)

## தொழில்நுட்பப் பயிற்சி விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலையத்திற்குப் (NVQ சான்றிதழ்) பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

T.V. & Radio Technology, Agriculture Equipment Technology, Electrician, Automobile Technology ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுளளது. இதற்கு விண்ணப்பிப்போர் க.பொ.த.(சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுதிகதியன்று 16 - 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதியுடையவர்கள் NAITA, A-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்திற்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நேரில் சமுகம் தருமாறும் மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் 2000 பேருக்கு வேலை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கவுள்ள தொழிற்சாலைகளில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர், யுவதிகளுக்கு விரைவில் வேலை வாய்ப்புக் கிடைக்கவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டுமானப் பணிகள் மற்றும் அதன் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடலில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

1971 ஆம் ஆண்டு 65 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாக



இருந்த இக்கைத்தொழிற் பேட்டையினது முதற்கட்டப் பணிகள் 25 ஏக்கர் நிலப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரு முயற்சியின் காரணமாகவே அச்சுவேலி கைத்தொழில் பேட்டையினது புனரமைப்புப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இப்புனரமைப்புப் பணிக்கென இந்திய அரசு 174 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது என்றார்.

இக்கலந்துரையாடலில் இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரி சிறிகாந், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் ஜஸ்மின் மன்னப்பெரும, மாவட்டப் பணிப்பாளர் கெங்காதரன், மாவட்ட செயலகத் திட்டப் பணிப்பாளர்கள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## வழக்கு ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

மல்லாகம் பிரதேசத்தில் 2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற வன்புணர்வு சம்பந்தமான வழக்கு விசாரணை யாழ்.மேல் நீதிமன்றத்தினால் மே மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னர் விசாரணைக்கு எடுக்கப்பட்டு பின்னர் சட்ட மா அதிபரினால் யாழ்.மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்.மேல் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது முறைப்பாட்டுக்காரரான பாதிக்கப்பட்ட பெண்ணின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டது.

எதிரி சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ், அரச தரப்பில் அரச சட்டத்தரணி வி.திருக்குமரன் ஆகியோர் ஆஜரானார்கள். (137)

## மாணவர்களின் நலன்கருதி விசேட பேருந்துச் சேவை

(வடமராட்சி)

பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சபை சாலையினரால் யாழ்.குருநகர் உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் நலன்கருதி 750 இலக்கப் பேருந்து சேவையொன்று கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை சாலை முகாமையாளர் கந்தையா கந்தசாமி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

காலை 6.30 மணிக்கு கச்சேரி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு ஒரு சேவையும், அடுத்து அதே வழிப் பாதையூடாக காலை 6.45 மணிக்கும் ஒரு சேவையும் வழங்கப்பட்டு வருகிறது.

இச்சேவையை ஏற்படுத்தித் தருமாறு கோரி இக்கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பை அடுத்து அச்சுவேலிப் பொலிஸாரினால் மல்லாகம் நீதவானுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

பருத்தித்துறை சாலை முகாமையாளருக்கு நீதவான் விடுத்த பலைப புரைக்கமைய மாணவர்களின் நலன் கருதி இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (116)

## மின் ஒளி

(மல்லாவி)

அனிஞ்சியன்குளம், வவுனிக்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு மின்சார வசதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பொதுமுகாமையாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். அடுத்த வாரம் இதற்கான மின்சார வசதிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (143)

## மது பாவனையைக் கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர கண்காணிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மது பாவனையைக் கட்டுப்படுத்துவதுடன் மதுப் பிரியர்களின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாக அச்சுவேலிப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இந்த வருடம் இதுவரை சட்டவிரோத வீதியோர மதுபாவனை, மது விற்பனை, மதுப் பிரியர்களின் தகாத செயற்பாடுகள் போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 18 பேருக்கு மொத்தமாக ஒரு இலட்சத்து 34 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

புத்தூர், அச்சுவேலி, தம்பாலை, கதிரிப்பாய், அச்செழு போன்ற பகுதியைச் சேர்ந்த நபர்களுக்கே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் சட்டவிரோத நடவடிக்கைகளால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் பட்சத்தில் அவை தொடர்பான குற்றச்சாட்டுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விசாரணைக்கு எடுக்கப்படும். எனவே பொதுமக்கள் சரியான தகவலைத் தரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

## இலங்கை மின்சார சபையால் புதிய மின்மாற்றிகள் அமைப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் மின்சார வலுக்குறைந்த பகுதிகளில் சீரான மின்சாரத்தை வழங்கவென பருத்தித்துறை இலங்கை மின்சார சபையினர் சுமார் ஐம்பது புதிய மின் மாற்றீடுகளை அமைத்துள்ளனர்.

இதன்படி வலிக்கன்தோட்டம் துன்னாலையில் 160 கிலோ வாற் 30 இலட்சம் ரூபா பெறுமதியிலும், வல்வெட்டித்துறை ஊரிக்காட்டில் 160 கிலோ வாற் 30 இலட்சம் ரூபா பெறுமதியிலும், காகிஸ் நிறுவனத்தினால் நெல்லியடிப் பகுதியில் 100 கிலோ வாற் 10 இலட்சம் ரூபா பெறுமதியிலும், அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடியில் 160 கிலோ வாற் 15 இலட்சம் ரூபா பெறுமதியிலும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் கம்பர் மலையில் 160 கிலோவாற் 30 இலட்சம் ரூபா பெறுமதியிலும், உடுப்பிட்டி - பொக்கணைச் சந்தியில் 160 கிலோவாற் 15 இலட்சம் ரூபா பெறுமதியிலும், சக்கலாவத்தையில் 160 கிலோவாற் 30 இலட்சம் ரூபா பெறுமதியிலும், திக்கம் பகுதியில் 160 கிலோவாற் 30 இலட்சம் ரூபா பெறுமதியிலும், தம்பசிட்டிச் சந்தியில் 160 கிலோவாற் 30 இலட்சம் ரூபா பெறுமதியிலும் மின் மாற்றீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தடையின்றி சீரான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

## ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு ஆசிரிய மாணவர்களை இணைக்கும் நேர்முகப் பரீட்சை 22 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி நெறிக்காக ஆசிரிய மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பக் கல்விப் பாடநெறிக்கும், 23ஆம் திகதி வர்த்தகம், சித்திரம், இந்து சமயம், கிறிஸ்தவம், றோமன் கத்தோலிக்கம் ஆகிய பாடநெறிகளுக்கும், 24ஆம் திகதி தமிழ், மனைப் பொருளியல், நடனம், சங்கீதம், கடல்வளத் தொழில்நுட்பம், விஞ்ஞானம், கணிதம், கைவினைத் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கும் 25ஆம் திகதி ஆங்கிலப் பாடநெறிக்கும் தேர்வுகள் இடம் பெறவுள்ளன. இதேவேளை வன்னியில் போர்ச் சூழல் காரணமாகப் பாதிக்கப்பட்டு பயிற்சி பெறாத ஆசிரியர்கள் மற்றும் தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் (எல்லாப் பாடங்களுக்கும்) 25ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

நேர்முகத் தேர்வின்போது பிரகடனப் படிவம், பிறப்புச் சான்றிதழ், முதல் நியமனக் கடிதம், தேசிய அடையாள அட்டை, கடமையேற்றமையை உறுதிப்படுத்தும் சம்பவத்திரட்டுப் புத்தகப் பிரதி, கல்வி மற்றும் தொழிற்தகைமைச் சான்றிதழ்கள், பதிவின் மூலம் இலங்கைப் பிரஜையாயின் அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களின் மூலப் பிரதி, போட்டோப் பிரதி ஆகிவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

பட்டதாரிகளாகவுள்ள ஆசிரிய உதவியாளர்கள் இப்பயிற்சி தமக்குத் தேவை எனக் கருதுபவர்கள் தத்தம் மாகாணக் கல்விச் செயலாளர்களின் விதந்துரையின் அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றுவதை அவர்கள் முடிவு செய்யலாம் எனக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

## யாழில் வாகன நெருக்கடி; பொலிஸ் கண்காணிப்பு அவசியம்

யாழ்.குடாநாட்டு வீதிகளில் வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்துக் காணப்பட்டு வருவதுடன் நெருக்கடி நிலையும் தோன்றியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் வீதித் தடைகளைப் போடுவதிலும் போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ள போதிலும் சில இடங்களில் வீதிகளின் ஓரங்களில் பார ஊர்தி, வான் தரித்து நிற்பதினால் எதிரே வருகின்ற மற்றைய வாகனங்கள் அவற்றை விலகிச் செல்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

தற்போது சிறிய சிறிய வீதிகளில் தென்னிலங்கையில் இருந்து சுற்றுலாவுக்காக வருவோர் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற பெரிய வாகனங்கள் வீதியோரங்களில் தரித்து நிற்பதினாலும் வீதிப் போக்குவரத்துச் செய்வதில் பலத்த அபாயங்கள் ஏற்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே முக்கியமான இடங்களில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் எனப் பொது மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (05)





வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க சொற்பொழிவுத் தொடரில் "ஈழத்து அறிஞர்கள்" என்ற தலைப்பில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டலுவலர் மா.அருள்சந்திரன் உரையாற்றுவதையும், கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களையும் காணலாம். (142)

# யாழ்ப்பாணத்தில் 5278 கடற்கலங்கள் நீரியல் வள திணைக்களத்தில் பதிவு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடமிருந்து சுமார் 200 கடற்கலங்கள் வரை யாழ். மாவட்ட கடற் றொழிலாளர்களினால் பதிவு நடவடிக்கைக்கு உட்படுத்தியிருபபதாக யாழ்மாவட்ட கடற்றொழில நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பதிவு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு தமது மாவட்ட அலுவலக ஊழியர்களுக்கு குழுவின் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய பதிவு நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே 5078 கடற்கலங்கள் பதிவுக்குட்பட்டிருந்ததுடன் தற்சமயம் பதிவுகளுக்கு உட்பட்டிருக்கும் 200 கடற்கலங்களுடன் மொத்தம் 5278 கடற்கலங்கள் பதிவுகளுக்கு உட்பட்டிருப்பதாகவும் மேலும் பதிவு நடவடிக்கை தொடர்வதால் இத்தொகை மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்

பதிவு நடவடிக்கைகளை மேற கொண்ட குழுவினர் நேற்று முன தினம் மன்னார் மாவட்டத்தில் தமது பதிவு நடவடிக்கையினை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார் (பா)

# ஆங்கில கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்


(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்தும், வலய உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஸ்ரெப் (Step) ஆங்கிலக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து ஆசிரியர்கள், அதிபர்கள் ஊடாகவும், திணைக் கள உத்தியோகத்தர்கள் திணைக்கள தலைவர் ஊடாகவும் வலி காமம் கல்வி வலய ஆங்கிலப்பாட அபிவிருத்திப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும், போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலமே கற்கை நெறிக்கு விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் வலிகாம கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# பரமர் சங்கமம்



"மூன்று தசாப்தகால யுத்த முடிவின் பின்பாக எல்லா நடைமுறைகளுமே தலைகீழாக மாறியே நடைபெற்று வருகின்றது. அதற்குக் காரணம் அக்காலங்களில் பாவிக்கப்பட்ட வெடிப்பொருட்களின் அகோரம் தான் காரணமோ எண்றெண்ணத் தோன்றுகிறது.

ஏனெண்டால் உந்தக் கச்சதீவு பாலைதீவு திருநாட்கள் கூடத் தலைகீழாக மாறிவிட்டதைச் சொல்ல வேணும். கத்தோலிக்க மக்களால் வீபூதிப் புதன் தொடக்கம் ஆரம்பிக்கும் தவக்காலத்தில் மூன்றாம் வாரம் பாலைதீவுத் திருநாளும், நான்காம் வாரம் கச்சதீவுத் திருநாளும் வந்து போவது அந்தக்கால வழக்கம்.

இப்போ அது மாறி மூன்றாம் கிழமை கச்சதீவுப்பெருநாளும் நான்காம் கிழமை பாலைதீவுப் பெருநாளும் நடைபெற்று வருகின்றது. இந் நடைமுறையை இக்காலங்களில் வைப்பதற்கும் காரண காரியங்கள் அமைந்தன.

இந்தக்காலத்தில் எந்தவிதக் காற்றும் வீசாமல் சப்பென்று இருக்கும். இதனால் கடல் அலைகள் கொந்தளிப்புக்கள் ஏற்படாது. கடல் மார்க்கமாக யாத்திரிகர் வள்ளம், "போட்" போன்ற கடல் கலங்களில் சென்று மீள வேண்டுமதால் இந்தக்காலத்தை அந்தத் திருநாட்களை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தாக எமது முன்னோர் சொன்னதிலும் உண்மை இருக்கத்தான் இருக்கின்றது.

எது எப்படியோ சமீபத்தில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்திருநாள் நடந்து முடிந்திருக்கின்றது. அவ்வேளை சில சர்ச்சைகளும் எழுந்து முடிந்துள்ளன.

இலங்கை, இந்தியா மீனவர்கள் பற்றிய தீராத பிணக்குகள் கூட அங்கே சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் பிரஸ்தாபிக்கப்பட்டது. மேலும் கச்சதீவை கடத்தல் வியாபாரத்திற்குப் பயன்படுத்த முனைந்ததாக கூறி ஐவரைக் கைது செய்ததாகவும் தகவல்கள் வெளிவந்தன.

சிறிமாவோ பண்டாரநாயக்காவும் இந்திரா காந்தியும் இலங்கை- இந்தியப் பிரதமர்களாக இருந்த காலத்தில் இந்திரா காந்தியால் கையெழுத்திட்டு கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைத்த சம்பவங்கள் நடந்தேறின.

மிகச் சமீப காலத்திலும் கச்சதீவை இலங்கையிடம் இருந்து இந்தியா திரும்பப்பெற வேண்டுமென்ற பாங்கில் அங்குள்ள ஒரு சில அரசியல்வாதிகளால் கோரிக்கை வைக்கப்பட்டிருந்ததை எல்லாம் நீங்கள் பத்திரிகைகளில் வாசித்திருப்பீர்கள்.

அந்தளவுக்கு அங்கே என்ன முக்கியத்துவம் இருக்கின்றது? எண்டு பாத்தால் ஒண்டுமே இல்லை எண்டுதான் செல்லவேண்டும். ஏறத்தாள 40 ஆண்டுகளுக்கு முன்னம் கச்சதீவுக்கு போறேண்டால் சந்தோசம்தான்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கடவுச்சீட்டு சட்டம் வந்த பின்னால இங்காலேயும், அங்காலேயும் பிரிக்கப்பட்ட மக்கள் வருசத்தில் ஒரு நாள் கச்சதீவு அந்தோனியாரைச் சாட்டி சந்தித்து உறவாடி வந்தனர்.

இங்கிருந்து மாப்பிள்ளை போக அங்கிருந்து பொம்புளை வந்து திருமணச்சடங்குகள் நடந்ததுமுண்டு. தேங்காய், தேங்கா எண்ணெய்போன்ற பொருட்களை இங்கேயிருந்து கொண்டு சென்று குடுத்து அங்குள்ள புடவை, சாரம் போன்றவற்றை பண்டமாற்று செய்து வந்ததுமுண்டு. இப்ப அதுகலெல்லாம் மலை ஏறிப்போச்சுதுங்க....

# முற்றோதல்

(பருத்தித்துறை)

புலோலி மத்தி ஆத்தியடி பிள்ளையார் ஆலய கந்தபுராண படல பூர்த்தி நிகழ்வான ஸ்ரீ வள்ளியம்மை திருமணப்படல முற்றோதல் நிகழ்வு எதிர் வரும் 23ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முற்றோதல் நிறைவு பெற்றதும் பிள்ளையார், முருகப் பெருமான் வள்ளி, தெய் வானை சமேதராய் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (109)

# கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு நடராஜா வீரகத்தி விநாயகர் ஆலய பரிவார மூர்த்திகளுக்கான கும்பாபிஷேகம நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு சிவாச்சாரிய சிரோன்மணி சிவஸ்ரீ பிரபாகரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (11)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(மல்லாவி)

மல்லாவி நகரப்பகுதியில் டெங்கு நுளம்பினைக்கட்டுப் படுத்தும் நோக்கில் சிரமதானப் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை இப் பணிகள் இராணுவ அதிகாரி லெப்.அபயக்கோன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நகரப்பகுதியில் 3 கிலோ மீற்றர் தூரம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கடும் வெயில் மற்றும் மழைத தூறல் காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் இங்கு அதிகரித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (143)

# வாழ்வாதார உதவி வழங்கக் கோரிக்கை

(கரணவாய்)

துன்னாலை தெற்கு ஜே/370 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் தாம் உதவிகள் இன்றி வாழ்வாதார ரீதியாக கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம அலுவலர் பிரிவில் 25 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், தமக்கு அடிப்படை வசதிகளான மலசல கூடம், குடிதண்ணீர், மற்றும் வீட்டுத்திட்ட வசதிகள் இல்லாது மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருவதாகத தெரிவிக்கின்றனர்.

வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் வகையிலாவது அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டும் என கிராம மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (18)

# சர்வதேச புத்தக தினத்தை முன்னிட்டு கையெழுத்து சஞ்சிகைப் போட்டி

(சுன்னாகம்)

சர்வதேச புத்தக தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் கையெழுத்து சஞ்சிகைப்போட்டி ஒன்றை நடத்த வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

சபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.

பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக நடைபெறவுள்ள இந்தப்போட்டியின் மூலம் மாணவர்களின் திறன் விருத்தியடையும், கூட்டாக சேர்ந்து இயங்கும் பண்பையும் அதிகரிக்கும் நோக்கில் இந்தப்போட்டி நடைபெறவுள்ளது.

வகுப்பு ரீதியாக தயாரிக்கப்படும் சஞ்சிகைகள் வகுப்பாசிரியர், அதிபர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடன் வலி.கிழக்கு பிரதேச சபைக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என்று பிரதேச சபை கேட்டுள்ளது.

சிறந்த சஞ்சிகைகள் வகுப்படிப்படையில் உப அலுவலகப் பிரிவு ரீதியாகவும் பிரதேச சபை ரீதியாகவும் தெரிவு செய்யப்பட்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்று பிரதேச சபை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

# 47ஆவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை உப அலுவலக பொது நூலகத்தின் 47 ஆவது ஆண்டு நூலக நிறைவு விழாவும், சர்வதேச மகளிர்தின நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு உடுவில் பொது நூலகத்தில் நடைபெற வுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா பிரகாஷ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணிமில்ஸ். சிறப்பு விருந்தினராக அறநெறி பண்ணிசை ஆசிரியை செல்வி க.சிவயோகராணி, வலிகாமம் தெற்கு பிரதேச சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வவிநாயகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் மகளிர் தின தோற்றமும், இன்றைய நிலையும் என்னும் விடயம் பற்றி பிரதம விருந்தினரின் உரையும் "புதுமைப்பெண்" சிறப்புக் கவியரங்கமும் இடம் பெறவுள்ளது.

# யாழ்.பிரதான வீதியில் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள அந்திய கால சேவை நிறுவனத்தினர் இறந்தோர் உடல்களை சுத்தம் செய்யும் போது அப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனால் அவ்வீதியூடாகச் செல்லும் போது துர்நாற்றம் வீசுவதாகவும், அயலில் இருப்பவர்கள் பெரும் சிரமப்படுவதுடன், தொற்று நோய் தாக்கத்திற்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம், பாடசாலை, சந்தை, சிற்றுண்டிச்சாலை போன்ற பொது மக்கள் கூடும் இடங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் பொலிஸாரும் மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(எஸ்)

# முரசின் இன்றைய பலன்

(17.03.2012 -சனிக்கிழமை)

கர வருஷம் பங்குனி மாதம் 04 ஆம் திகதி. நவமி சித்தயோகம் முன்னிரவு 7.45 வரை.
நட்சத்திரம் பூராடம் முற்பகல் 7.58 வரை. இராகுகாலம் 9.19 - 10.49 வரை.
சுபநேரம் 3.19 - 4.49 வரை. எமகண்டம் 1.49 - 3.19 வரை.
குளிகை காலம் 6.19 - 7.49 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செலவுகள், சுபகாரியங்கள், வேலைப் பளுஅதிகரிக்கும், பணியிடமாற்றம். |
| ரிஷபம் | பெருமை சேரும், உறவினர் ஆதரவு, சொத்துக்கள் சேரும், காரியானுகூலம். |
| மிதுனம் | பயணம் தவிர்க்கவும், அறப்பணியில் நாட்டம், பிரிந்தவர் கூடுவர், வழக்கில் வெற்றி. |
| கடகம் | மறைமுகப் போட்டி, மகான்களின் ஆருள் ஆசி, தேவையற்ற அலைச்சல், மருத்துவச்செலவுகள |
| சிம்மம் | அரச நன்மைகள், குடும்பத்தில் மகிழ்ச்சி, பொன்பொருள் சேரும், பயண அனுகூலம். |
| கன்னி | பயணம் மூலம் வெற்றி, எதிர்பாராத பணவரவு, மங்களகரமான நாள், இலாபதினம். |
| துலாம் | நண்பர் உதவி, பணவிடயத்தில் கவனம், ஆரோக்கியத்தில் கவனம், குடும்பத்தில் பிரச்சினை |
| விருச்சிகம் | சுபச்செலவுகள், நிதானம் வேண்டும், பயண அலைச்சல், தெய்வ வழிபாடு. |
| தனுசு | புதிய முயற்சி, புத்திரபாக்கியம், வெளிநாடு செல்லும் வாய்ப்பு, தந்தை வழி உதவி. |
| மகரம் | நற்சிந்தனை, கொடுக்கல் வாங்கல் கஷ்டம், நிம்மதிக்குறைவு, மருத்துவச் செலவு. |
| கும்பம் | நட்பு நாழ வரும், ஆடம்பரச் செலவுகள், உறவினர் அனுசரணை, பாராட்டுதல்கள். |
| மீனம் | உயர்வு கிட்டும், பணப்பரிமாற்றத்தில் கவனம், புத்திரர் வழியால் மகிழ்ச்சி, பொருட்செலவு. |

# பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலமே நாட்டின் பெருமையைப் பாதுகாக்க முடியும்

- ஜி.பிரமோத்குமார் கட்டுரையிலிருந்து.

கடந்த புதன்கிழமை அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரைவுத் தீர்மானம், உரிமை மீறல்கள் பற்றி சாட்டப்பட்டுள்ள குற்றங்களை விசாரிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் (எல்.எல்.ஆர்.சி) அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என அழைப்பு விடுக்கிறது.

அந்தத் தீர்மானம் மேலும் வலியுறுத்துவது, இலங்கையின் பொருத்தமான கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கும் மற்றும் நீதி நிலைநாட்டப்படுவதையும், சமத்துவம், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற சுயாதீனமான மற்றும் நம்பிக்கையான அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு எல்.எல்.ஆர்.சி யின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், மற்றும் சர்வதேச விதிகளை மீறியதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பரிகாரம் காண்பதற்கும், அரசாங்கம் எடுத்துள்ள மற்றும் இனி எடுக்க எண்ணியுள்ள நடவடிக்கைகளுக்கான விரிவான செயல் திட்டம் ஒன்றை சமர்ப்பிக்கும்படியும் அது கோருகிறது.

தற்போது அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரின் அலுவலகம் (ஓ.எச்.சி.எச்.ஆர்), அந்த நடவடிக்கைகளை அமுல் படுத்துவதில் தலையிடும்படி கேட்கப்படும்.

மனித உரிமைகள் மீறப்பட்டதுக்கு ஏராளமான சான்றுகள் உள்ளன என்று கூறப்படும் சர்வதேச அழுத்தங்களை நிராகரிக்கும் முகமாக, இலங்கை எப்போதும் அந்தச் சான்றுகள் போலியாக உருவாக்கப்பட்டவை என்றும் மற்றும் அப்படி ஏதாவது சில சம்பவங்கள் நடைபெற்றிருந்தால் கூட, அதைக் கையாள்வதற்கு ஏற்ற திறமையை நாடு கொண்டிருக்கின்றது என்கிற நிலைப்பாட்டையே தொடர்ந்து பேணி வருகிறது. தமிழர்களைத் தவிர, நாட்டிலுள்ள அனைவரும் அதன் பிரதிநிதிகள் உட்பட, மேற்குலகம் தங்கள் உள்நாட்டு விடயங்களில் ஒழுக்கமற்ற முறையில் குறுக்கிடுகிறது என ஏகோபித்த குரலில் சாடி வருகிறார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் இடையில் மிகவும் சங்கடமான தெளிவின்மையாக இருப்பது இந்தியாவின் நிலைப்பாடே இலங்கையின் மிகைப்பட்ட செயல்களுக்காக அது இலங்கையை ஒருபோதும் குற்றம் சாட்டியது கிடையாது ஆனால் மென்மையான தெரிவாக, மனிதாபிமான மற்றும் அரசியல் பரிமாணங்களில் தனது கவனத்தைச் செலுத்தி வருகிறது. அதன் அத்தகைய நிலைப்பாடு காரணமாக, இந்த விடயத்தில் சில உணர்ச்சிபூர்வமான முறைப்பாட்டைக் கொண்டுள்ள தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் தொல்லை கொடுக்க ஆரம்பித்துள்ளன.



மத்திய அரசாங்கம் அமெரிக்காவின் தீர்மானம் சம்பந்தான அதன் நிலைப்பாட்டைப் பற்றிய ஒரு தெளிவான முடிவை அறிவிக்கவில்லை. இந்த விடயம் தொடர்பாக எஸ்.எம்.கிருஸ்ணா பேசிய வார்த்தைகள் ஆணித்தரமாக இருக்கவில்லை, "நிச்சயமாக நாங்கள் இந்தியாவுக்கும் மற்றும் இலங்கைக்கும் இடையில் உள்ள முற்று முழுதான உறவையும் மற்றும் எமது நாட்டில் (தமிழ் நாடு) நிலவும் உணர்வுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்வோம். ஜெனிவாவில் எமது நிலைப்பாட்டைப் பற்றிய இறுதி முடிவை எடுக்க முன்னர் சகல காரணிகளையும் கவனத்தில் எடுப்போம்" என அவர் கூறியுள்ளார்.


இலங்கையில் சீனா மற்றும் பாகிஸ்தான் என்பனவற்றின் பிரசன்னம் தவிர்க்க முடியாத அளவிற்கு வலுவாக உள்ளது மற்றும் அந்தத் தீவுடன் எத்தகைய செல்வாக்கினை இந்தியா கொண்டுள்ளதோ அதனை இழந்துவிடுவதற்கு இந்தியா தயாரில்லை. இந்தியாவின் பலவீனத்தை இலங்கை நன்கு உணர்ந்து கொண்டுள்ளதுடன், சிறிது காலமாக அது இந்தியாவுக்கு விளையாட்டு காட்டியும் வருகிறது. போரின் உச்சக்கட்டத்தின் போதுகூட இலங்கையின் செயல்களையிட்டு இந்தியாவின் கண்டனம் தேவையான அளவிற்கு மௌனமாகவே இருந்தது.

தீர்மானத்தின்போது இந்தியா வாக்களிக்காது நடுநிலை வகித்தாலும், தமிழ் நாட்டு மக்களின் உணர்ச்சிகளை மத்திய அரசாங்கம் புறக்கணித்த மற்றொரு சம்பவமாகவே அது பார்க்கப்படும். அது தமிழ்நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளுக்கு, தமிழர்களின் நலன்களுக்கு துரோகம் இழைத்து விட்டதாகக் கூறி காங்கிரஸைத் தாக்குவதற்கு புதிய ஒரு பிடி கிடைத்தது போலிருக்கும்.

இதில் சுவாரஸ்யமானது என்னவென்றால், அமெரிக்காவின் தீர்மானம் அமுல்படுத்த கோரும் பரிந்துரைகள் யாவும் வெளியிலிருந்து சிபார்சு செய்யப்பட்ட மருந்துகள் அல்ல, ஆனால் இலங்கை தனது கைகளினாலேயே உருவாக்கிய எல்.எல்.ஆர்.சி யினால் அறிவுறுத்தப்பட்டவைகளே.

நீதிக்கு புறம்பான கொலைகள் மற்றும கட்டாயமாக காணாமற் போனவர்கள் பற்றியும் பரவலாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளை நம்பகரமான முறையில் விசாரிப்பது அவசியம் என எல்.எல்.ஆர்.சி பரிந்துரைத்துள்ளது, தவிரவும் வடக்கிலுள்ள இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றவும் மற்றும் பக்கச் சார்பற்ற முறையில் காணித் தகராறுகளை தீர்க்கும் பொறிமுறைகளை அமுல்படுத்தவும் அது கோரியுள்ளது.

முன்னர் சுயாதீனமாக இயங்கிய குடியியல் நிறுவனங்களை வலுப்படுத்தவும், தடுப்புக்காவல் கொள்கைகளை



மறுசீரமைக்கவும், மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து ஒரு அரசியல் தீர்வினை எட்டும்படியும், அனைவரினதும் கருத்து சுதந்திர உரிமைகளை பாதுகாத்து அதனை மேலும் முன்னேற்றும்படியும் மற்றும் சட்ட சீர்திருத்த விதிகளை இயற்றவும் அது மேலும் பரிந்துரை செய்துள்ளது.


இந்தப் பரிந்துரைகள் ஒன்றும் தீவிரமானவைகள் இல்லை தவிரவும் இலங்கை மீதான மிதமிஞ்சிய செயல்கள் குறித்த அவப்பெயரை அகற்றுவதற்கான அதன் நலனை மட்டுமே குறிக்கோளாக கொண்டுள்ளன. பொறுப்புக்கூறும் கடப்பாட்டை நிர்ணயித்து, இழப்புகளுக்கு ஈடு செய்யும் நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே 'தமிழ்' மற்றும் 'மனித உரிமை' என்கிற வார்த்தைகளை சொல்லும்போது, பெரும்பான்மை இனத்தவரின் குறுகிய போலிப்பற்றுள்ள தேசியவாதக் கொள்கைகளின் கூச்சல்கள் நாட்டினுள் எழுவதை தவிர்த்து நாட்டின் பெருமையை பாதுகாக்க முடியும்.

## மிகப் பெரிய கலைக் குற்றம்

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் 10 அடி உயரத்தில் இரண்டு மூங்கில் கம்புகளுக்கு இடையே அந்தரத்தில் கயிற்றை கட்டி வித்தை காட்டும் கழைக் கூத்தாடிகளை படங்களிலாவது பார்த்திருப்பீர்கள். இதையே மிகப் பெரிய அளவில் கற்பனை செய்து பாருங்கள். 10 அடி உயரத்திற்கு பதிலாக 1,368 அடி உயரம், மூங்கில் கம்புகளுக்குப் பதிலாக இரட்டைக் கோபுரத்தை (தீவிரவாதிகளால் தரைமட்டமாக்கப்பட்ட அதே அமெரிக்க இரட்டை கோபுரம் தான்) பயன்படுத்தினார் ஒருவர்.

கழைக்கூத்தாடிகளின் சர்வதேச அடையாளம்தான் பிலிப் பெட்டி என்பவர். எங்கேயாவது உயரமாக எதையாவது பார்த்தால் போதும் உடனே ஓடிப்போய் கயிறு கட்டி அதன்மேல் நடக்க தொடங்கிவிடுவார். பிலிப் 1949இல் பிரான்சில் பிறந்தவர். மற்றவர்கள் தரையில் நின்று செய்யத் தயங்கும் பல விஷயங்களை அனாயசமாக கயிற்றில் நின்று கொண்டு செய்வார். இரட்டைக் கோபுரங்களுக்கு இடையே கம்பி கட்டி நடந்ததுதான் இவரின் சாதனைகளில் உச்சம்.

ஒரு புத்தகத்தில் உலகிலேயே உயரமான கட்டடம் இரட்டைக் கோபுரம்தான் என்பதை படித்துவிட்டார். ஒரே உயரத்தில் அருகருகே இரண்டு கட்டடங்கள் இருப்பது பிலிப்புக்கு வசதியாகப் போய்விட்டது. உடனே எப்படியாவது



அதன் இடையே கம்பி கட்டி நடக்க வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது.

இரட்டைக் கோபுரத்தின் உயரத்திற்கு நினைத்தபடி போய்விட முடியாது. அங்கு ஏகப்பட்ட பாதுகாப்பு கெடுபிடிகள் உண்டு. அதையெல்லாம் மீறி சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக திட்டம் தீட்டி 6 வருடங்கள் பாடாதபாடு பட்டார்.

இரட்டைக் கோபுர கட்டடங்களின் உயரம் 1,368 அடி. இரண்டுக்கும் இடைவெளி 140 அடி. இரண்டு கட்டடங்களையும் இணைக்க நூற்றுக்கணக்கான கிலோ எடையில் கம்பி வேண்டும். கடுமையான பாதுகாப்பு மிகுந்த அந்த இடத்தில் அவ்வளவு உயரத்திற்கு எப்படி இத்தனை எடையையும் பொலிஸ் கண்ணில் மண்ணைத் தூவி எடுத்துச் செல்வது? இது நடக்கவே நடக்காது என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், கடும் முயற்சி எடுத்து யாருக்கும் தெரியாமல் கம்பி போன்ற சாதனங்களை கொஞ்சம் கொஞ்சமாக மேலே கொண்டு சென்று தனது சாதனையை பிலிப் நிகழ்த்திக் காட்டினார்.

1974 ஆகஸ்ட் 7 ஆம் திகதி காலை 7.15 மணிக்கு இரட்டை கோபுரங்களுக்கு இடையே கம்பியை கட்டி நடந்தார். கோபுரங்களுக்கு இடைப்பட்ட 140 அடி தூரத்தை கம்பி மேல் நடந்து கடக்க சுமார் 45 நிமிடம் பிடித்தது.

முறைப்படி அனுமதி பெற்று இந்த சாதனையை செய்யவே ஏகப்பட்டவர்களின் உதவி வேண்டும். ஆனால், தனி ஆளாக யாருக்கும் தெரியாமல் இந்த சாகசத்தை நிகழ்த்தி முடித்தவுடன் பிலிப்பை பொலிஸ் கைது செய்து சிறையில் அடைத்தது. "இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கலைக்குற்றம்" என்று இதை அமெரிக்கா சொன்னது.

பிலிப் பெட்டியின் திட்டமிடலும் இந்த சாகசமும் "Man on wire" என்ற பெயரில் டொக்குமெண்ட்ரி படமாக வெளிவந்து ஒஸ்கார் விருதையும் பெற்றது.

## பிரபாகரன், கொல்லப்பட்ட விதம் வீடியோவில் இல்லை

தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் என்ற பெயரில், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சனல் - 4 என்ற தொலைக்காட்சி இன்று வெளியிட்ட வீடியோவில் எதிர்பார்த்த அளவிற்கு பெரும் அதிர்ச்சியை வெளிக்கொணரும் வகையில் எந்தவொரு காட்சிகளும் இதில் இடம்பெறவில்லை. ஏற்கனவே காட்டப்பட்ட விஷயங்களும், சில குண்டுவெடிப்புகளும், சில மக்கள் இரத்த வெள்ளத்தில் கிடப்பதும் போன்ற காட்சிகளும், பிரபாகரன் மகன் இறந்து கிடக்கும் காட்சிகளும் இருந்ததே தவிர, அப்பட்டமான வெறிச்செயல்கள் எதுவும் இந்த கோப்பில் (சனல் -4 க்கு கிடைக்கவில்லை) இடம்பெறவில்லை.

குறிப்பாக புலித்தலைவர் பிரபாகரன் எவ்வாறு கொல்லப்பட்டார், எவ்வளவு தூரம் கொடுமைப் படுத்தப்பட்டார் என்ற விவரம் இன்று வெளியாகும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் 40 நிமிடங்களுக்கு மேல் ஓடும் இந்த கோப்பில் இவ்வாறு இடம் பெற்றிருக்குமாயின் பெரும்



எதிர்ப்பையும், கண்டனத்தையும் எழுப்பியிருக்கும். ஆஸ்பத்திரி மீது குண்டு வீச்சு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்காமை போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் இறந்து கிடப்பது போன்ற ஒரு காட்சி இருக்கிறது. (அதுவும் சில புகைப்படமாக தெரிகிறது) புலித்தலைவர் பிரபாகரன் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார் என்ற காட்சிகள் எதுவும் வீடியோவில் இல்லை. இந்த வீடியோ காட்சிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டும் தெரிந்ததாகவும், ஆசிய நாடுகளுக்கு சரிவரத் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

- தினமலர் (15-03-2012)

# பூமியை நேசிப்போம்!

ஒரு பிரபலமான ஜென் கதை உண்டு. இரண்டு துறவிகள் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். போகும் வழியில் ஒரு தேள் தண்ணீரில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தது. ஒரு துறவி அதைத் தூக்கிக் கரையில் போட முயன்றார், தேள் அவரைக் கொட்டியது. மீண்டும் அதைக் காப்பாற்றத் தூக்கினார். தேள் மீண்டும் கொட்டியது.

அவர் மீண்டும் மீண்டும் முயல, தேள் அவரைத் தொடர்ந்து கொட்டிக் கொண்டே இருந்தது.



இதைப் பார்த்துப் போறுக்க முடியாத இரண்டாவது துறவி கேட்டார், "தேள்தான் கொட்டுகிறதே சுவாமி.... அதை விட்டு விட வேண்டியது தானே?"

முதல் துறவி பதிலளித்தார், "கொட்டுவது தேளின் இயல்பு. அதே போல காப்பாற்றுவது மனிதனின் இயல்பு அல்லவா? தேள் தன் இயல்பை விட்டுவிடாத போது நான் ஏன் என்னுடைய இயல்பை விட வேண்டும்?"

அழகான இந்தக் கதை, இயல்புகளைப் பற்றிப் பேசுகிறது. நாம் பெரும்பாலும் அடுத்தவர்களுடைய இயல்பைப் பற்றிப் பேசுகிறோம். நம்முடைய இயல்புகளைப் பற்றி சிந்திப்பதில்லை. கடைசியில் அடுத்தவருடைய இயல்புகளே நம்முடைய இயல்பை நிர்ணயம் செய்யும் காரணிகளாகி விடுகின்றன.

அடிக்கடி நாம் இயற்கையை நேசிப்பதைப் பற்றியும், ஓசோனில் விழும் ஓட்டையைப் பற்றியும், "குளோபல் வார்மிங்" எனும் புவி வெப்பமாதலைப் பற்றியும் படிக்கிறோம். படித்துவிட்டு, அது ஏதோ உலகத் தலைவர்களுக்கான சமாச்சாரம் என அடுத்த செய்திக்குத் தாவி விடுகிறோம்.

உண்மையிலேயே அது நமக்குச் சம்பந்தமில்லாததா? தேவையில்லாததா?

ஆம் என்று சொல்கிறீர்களெனில் ஒன்று, உங்களுக்கு விஷயம் தெரியாது! அல்லது அதன் வீரியம் தெரியாது!

குளோபல் வார்மிங் பற்றி கடந்த பத்து ஆண்டுகளில் அலசப்பட்டதைப் போல எப்போதுமே அலசப்பட்டதில்லை. காரணம் அதன் அச்சுறுத்தல் அப்படி. புவி வெப்பமயமாதல் என்றால், "ஆமாம், அதுதான் வரவர இப்ப வெயில் சூடா வறுத்தெடுக்குது" என சீரியஸாய் சொல்லிவிட்டுக் கடந்து போகும் அறியாமை மனிதர்கள் உண்டு.

அவ்வளவுதானா குளோபல் வார்மிங்?

விஞ்ஞானம் பயப்படுவதைப் போல குளோபல் வார்மிங் தனது வேலையைக் காண்பித்தால் என்ன நடக்கும் தெரியுமா? கடல் மட்டம் உயரும். பல நாடுகள் தண்ணீருக்குள் மூழ்கிப் போகும். வெள்ளப்பெருக்கு, சுனாமி, சூறாவளி, வெப்ப அலைகள் என வரிசையாய் பல இயற்கைச் சீற்றங்கள் நிகழும். தொற்று நோய்கள் காட்டுத் தீயைப் போலப் பரவும்!

பூமியின் வெப்பம் அப்படியே கடலுக்கும் பரவும். கடலின் வெப்பம் பனியை உருக்கும், நீர்மட்டம் உயரும், வெப்பம் மீண்டும் அதிகரிக்கும். இது ஒரு மோசமான சங்கிலித் தொடர்போல நடந்து ஒரு நாள் நமது பூமி தண்ணீருக்குள் மூழ்கிப் போய்விடும் எனும் அச்சம் விஞ்ஞானத்துக்கு உண்டு!

அவர்கள் எடுத்து நீட்டும் புள்ளிவிவரப்படி, கடந்த 20 ஆண்டுகளாக பூமியின் வெப்பம் பெருமளவு அதிகரித்திருக்கிறது. நீராவி, காபனீரொட்சைட், ஓசோன், மீத்தேன், நைட்ரஸ் ஒக்ஸைட் என பூமியில் அதிகரித்து வரும் இந்த இரசாயன சமாச்சாரங்கள் புவியை சூடேற்றி வருகின்றன!

"மரம் நடுவோம்" எனும் கோஷம் எப்போதாவது உங்களை உசார் படுத்தியதுண்டா? மரங்களின் குறைபாடு பூமியில் காபனீரொட்சைட்டை நிரப்பி விடுகிறது. அது பூமியின் வெப்பத்தை சடசடவென உயர்த்தி விடுகிறது.

இளைஞர்கள் மனது வைத்தால் பூமி அழகாகும் என்பதில் சந்தேகமில்லை. "நான் மட்டும் நினைச்சு என்ன நடக்கப் போகுது" அல்லது "மற்றவர்கள் முதலில் அப்படி நடக்கட்டும்" என்பது இன்றைக்கு இளம் வயதினரிடையே பரவலாய்க் காணப்படும் சிந்தனை.

கடற்கரையில் ஒரு சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான். கரையில் கொட்டிக் கிடந்த நட்சத்திர மீன்களை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கிக் கடலில் எறிந்து கொண்டிருந்தான். அதைப் பார்த்த ஒருவர் கேட்டார், "என்ன தம்பி, இங்கே ஆயிரக்கணக்கான மீன்கள் கிடக்குது... நீ ஒண்டோ ரெண்டோ எடுத்து கடலில் போடு றதால என்ன ஆகப் போகுது?"

சிறுவன் சொன்னான், "அந்த ரெண்டு மீனுக்கும் வாழ்வு கிடைக்கும். என்னால் காப்பாற்ற முடியாத ஆயிரம் மீன்களை விட காப்பாற்ற முடிந்த இரண்டு மீன்களே என் கவனத் தில் இருக்கும்".

பெரியவர் அசந்து போனார்.


நம்மால் சரி செய்ய முடியாத ஆயிரம் சிக்கல்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப் பதை விட, நம்மால் செய்ய முடிந்த வேலைகளைச் செய்வதே சிறப்பானது!

சின்னச் சின்னப் பிழைகளின் தொகுப்பே அவலட்சணங்களின் பேரணி!

நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம் எனும் ஐந்து பூதங்களும் தனது தூய்மையை இழக்கும்போது மனிதனின் வாழ்க்கையும் பொலிவிழக்கிறது. வாகனப் புகைகள், மரங்கள் அழிக்கப்படுதல் என பல விஷயங்கள் காற்றைக் கறையாக்குகின்றன.

தொழிற்சாலைக் கழிவுகள், குப்பைகள், மருத்துவக் கழிவுகள், வீட்டுக் கழிவுகள் எல்லாம் தண்ணீரை தரமிழக்க வைக்கின்றன. பிளாஸ்டிக், அமிலங்கள், இரசாயனங்கள் போன்றவை நிலத்தை அழிக்கின்றன. உலகில் மொத்தம் இரண்டு கோடி இரசாயனங்கள் இருக்கின்றன. 27 வினாடிகளுக்கு ஒரு புது இரசாயனம் கண்டுபிடிக்கப்படுகிறது.

நிலம் பாழ்பட்டுக் கொண்டே போகிறது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமது பூமியைக் காப்பாற்ற நம்மால் என்ன செய்ய முடியும் என யோசிப்பதுதான்.




வீசப்படும் பிளாஸ்டிக் பைகள், குடித்து வீசி எறியும் தண்ணீர்ப் போத்தல்கள் ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகள் மண்ணை மாசுபடுத்திக் கொண்டே இருக்கும்! பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்பது, இல்லையேல் மறு சுழற்சிக்கு உட்படுத்துவது மட்டுமே தீர்வு!

ஆண்டு தோறும் குவியும் எலக்ட்ரோனிக் குப்பைகள் சுமார் பத்து கோடி தொன்! ஆயிரக் கணக்கான நச்சுப் புகைகளுடன் இருக்கும் இந்த இ-வேஸ்ட் களையும் மறு சுழற்சிக்குள் அனுப்புவது மட்டுமே சரியான தீர்வு!

தங்கத்தை விட அதிகமாய் நாம் பாதுகாக்க வேண்டிய பொருள் தண்ணீர். தங்கம் இல்லாமல் வாழலாம், தண்ணீர் இல்லாமல் வாழ முடியாது. ஒரு சொட்டு தண்ணீரைக் கூட வீணாக்காமல் பயன்படுத்து வதே இதன் தீர்வு. இல்லையேல் இன்னும் சில பத்தாண்டுகளில் தண்ணீர் இல்லாமல் மானுடம் தவிக்க வேண்டியதுதான் என்கிறார்கள்.

"பயன்பாட்டைக் குறை, மீண்டும் பயன்படுத்து, மறு சுழற்சிக்கு உட்படுத்து" (Reduce, Reuse, Recycle) எனும் இயக்கம் இன்று வலுவாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. தேவையற்ற பொருட்களை வாங்கிச் சேகரிக்காமல் இருப்பது முதல் தேவை.

பழைய பொருட்களை நீண்ட நாள் பயன்ப டுத்துவது, பின் அதை தேவையானவர்களுக்குக கொடுப்பது அல்லது பழையவற்றை வாங்கிப் பயன்படுத்துவது இவை இரண்டாவது தேவை.


குப்பையான பின் மறு சுழற்சிக்கு உட்படுத்தி மண்ணை மாசு படாமல் தடுப்பது மூன்றாவது!

**நேசிப்போம் நம் மண்ணை**
**அவளும் நமக்கோர் அன்னை!**

**- சேவியர் -**

# கண்ணிவெடி பயங்கரம்

போரைவிடக் கொடுமையானது கண்ணிவெடி. போர் கூட ஒரு கட்டத்தில் முடிவுக்கு வந்துவிடும். ஆனால், கண்ணிவெடிகளின தாக்குதல் வருடக்கணக்கில் மக்களை தொடர்ந்து பழிவாங்கிக் கொண்டே இருக்கும். யார் எங்கே கண்ணிவெடி களை புதைத்து வைத்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. விளைவு... எந்த வகையிலும் போருடன் சிறிதும் சம்பந்தம் இல்லாத சாமானிய மக்கள் உயிரையும் உடல் உறுப்புக் களையும் இழக்கிறார்கள்.



நமக்கும் பின்னால் பலாப்பழத்தோடு பல நாடுகள் இப்போதும் இருக்கின்றன. கண்ணிவெடியில் கதிகலங்கிப் போய் இருக்கும் ஒரு நாடு எகிப்து. சுமார் 2 கோடியே 30 இலட்சம் கண்ணிவெடிகள் அந்த நாடு முழுக்க உள்ளதாம். 1956, 1967 மற்றும் 1973 களில் நடந்த எகிப்து - இஸ்ரேல் போர்தான் நாட்டை இப்படி கண்ணிவெடி தேசமாக மாற்றிவிட்டது. எதிரி நாட்டு டாங்கிகள் முன்னேறி வந்தால் அவைகள் சின்னாபின்னமாக வேண்டும் என்று வைத்த கண்ணிவெடிகள் அவ்வப்போது வெடித்து மக்களை கொன்று கொண்டே இருப்பதுதான் வேதனை.


இவற்றை அகற்றுவதற்காக 15 வருடங்கள் கடுமையாக போராடிய எகிப்து, கடைசியில் மேற்கு பாலைவனத்தில் 70 இலட்சம் கண்ணிவெடிகளும் சீனாய் பாலைவனத்தில் 30 இலட்சம் கண்ணி வெடிகளும் எடுக்காமலே விடப்பட்டன. அவை மண்ணுக்குள் புதைந்தபடி வெடிக்கக் காத்திருக்கின்றன. தொட்ட இடமெல்லாம் கண்ணிவெடியாக காட்சி தருவதால் இதை சாத்தானின் தோட்டம் என்கிறார்கள்.

இதைப்போலவே தென்மேற்கு ஈரானும் கண்ணிவெடிகளால் சூழப்பட்டு இருக்கிறது. ஈரான், ஈராக் போரே இந்த கண்ணிவெடி புதைப்புக்கு காரணம். 1980களில் ஈரான் அரசு புதைத்து வைத்த கண்ணிவெடிகளின் எண்ணிக்கை ஒரு கோடியே 60 இலட்சம். எல்லைப்பகுதியில் சுமார் 42 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் இவை புதைக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த பகுதியே எந்த வளர்ச்சியும் இல்லாமல் கட்டாந்தரையாக கிடக்கிறது.

அங்கோலாவின் மொத்த மக்கள் தொகையைவிட அங்கு புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளின் எண்ணிக்கை அதிகம். விவசாயம் செய்ய நிலத்தை தோண்டினால் வெடிக்கிறது. வீதிகள் போடுவதற்கு குழி தோண்டினால் வெடிக்கிறது. இந்த வெடிக்கு மறைந்தவர்கள் எண்ணிக்கை மட்டும் 70 ஆயிரம் என்கிறது ஐக்கிய நாடுகள் அறிக்கை. இரண்டு கோடி கண்ணிவெடிகள் இங்கு புதைக்கப்பட்டுள்ளன. இதை எப்படி அகற்றுவது என்று விழி பிதுங்கி நிற்கிறது அங்கோலா அரசு.

ஆப்கானிஸ்தானில் தினமும் 10 முதல் 12 பேர் வரை கண்ணிவெடியை மிதித்து காலியாகிறார்கள். 1979 முதல் 1992 வரை அங்கு புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளின் எண்ணிக்கை ஒரு கோடிக்கு மேல். ஈராக்கிலும் அதே அளவுக்கு கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. எதிரிக்கு வைத்த கண்ணிவெடியில், அவற்றை வைத்தவர்களே சிக்கிக்கொள்கிறார்கள். நாட்டில் சுமார் 1.5 இலட்சம் குடும்பங்கள் கண்ணிவெடிகளினால் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படுகின்றனர். ஈராக்கில் 3,500 இடங்கள் இப்படி கண்ணிவெடிகளினால் நிரம்பி வழிகின்றன. உலகம் முழுவதும் கண்ணிவெடியால் ஒரு காலை இழந்தவர்கள் மட்டும் 2.5 கோடிக்கும் அதிகம்.இந்த கொடுமையின் தொடர்ச்சியை நாமும் அனுபவித்தோம். ஆனால் ஒப்பீட்டளவில் மிகவிரைவாக பெருமளவு கண்ணிவெடிகளை அகற்றி, அவற்றை வாழும் பிரதேசங்களாக்கிக் கொண்டுவிட்ட சாதனையாளர்களாகவும் நாம் உள்ளோம். உதவி செய்த நாடுகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், உயிரையும் பொருட்படுத்தாது உழைத்த களப்பணியாளர்களுக்கும் நாம் நன்றி சொல்ல கடமைப்பட்டவர்கள்.

# என்சைக்கிளோபீடியா அச்சுப் பதிப்பு நிறுத்தம்




244 ஆண்டு பழைமை வாய்ந்த என்சைக்கிளோ பீடியா பிரிட்டனிக்கா தனது அச்சுப் பதிப்பை முற்றாக நிறுத்துவதாக அறிவித்துள்ளது. பதிலாக 32 பாகங்களாக வெளியாகும் என்சைக்கிளோ பீடியாவை முழுமையாக டிஜிடல் முறையில் கொண்டுவருவதாக அதனை பதிப்பிக்கும் சிக்காகோவை மையமாகக் கொண்ட நிறுவனம் அறிவித்துள்ளது.

'விக்கிபீடியா' போன்ற தகவல் திரட்டு இணையதளங்களின் வருகையால் பாதிக்கப்பட்ட என்சைக்கிளோபீடியா இந்த முடிவை எடுத்துள்ளது. 'பதிப்பை நிறுத்துவது குறித்து அண்மைக்காலமாகவே ஆலோசித்து வந்தோம். தற்போது புதிய மாற்றமாக அனைத்தையும் டிஜிடல் மயமாக்கவுள்ளோம்' என்று என்சைக்கிளோபீடியா தலைவர் ஜோர்ஜ் கவுஸ் குறிப்பிட்டார்.

1950, 60 ஆம் ஆண்டுகளில் விற்பனையில் சாதனை புரிந்த என்சைக்கிளோபீடியா பதிப்பு இணையத்தள வருகையின் பின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதில் 1990 ஆம் ஆண்டு இதன் 120,000 முழுப் பதிப்புகள் அமெரிக்காவில் மாத்திரம் விற்பனையானது. ஆனால் 2010 ஆம் ஆண்டு என்சைக்கிளோபீடியா 12,000 முழுப் பதிப்புகளை அச்சிட்டது. அதில் 8000 பதிப்புகள் தான் விற்பனையானமை குறிப்பிடத்தக்கது.



# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பல கட்சி அணுகுமுறை அவசியம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானத்தை எதிர்க்கிறோம். மனித உரிமை மீறல்களை ஆராயவும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் பல்கட்சி அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தெரிவிக்கையில்,

மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் பொறுப்பு அரசாங்கத்திடம் மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளதால் கட்சி இந்தத் தீர்மானத்தை எதிர்பார்க்கின்றது.

இந்தத் தொடர் செயன்முறையில் பல்கட்சி அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டால்தான் அது நடுநிலையானதாக இருக்க முடியும். பல்கட்சி அணுகு முறையைத்தான் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் சிபாரிசு செய்துள்ளது. தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்கட்சி முன்பு கடைப் பிடிக்கப்படுமென பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தென்னாபிரிக்கா சென்றிருந்தபோது கூறியிருந்தார்.

அரசாங்கம்தான் பாதுகாப்புப் படைகளை காட்டிக்கொடுத்துள்ளது. பாதுகாப்புப் படைகளினால் மேற்கொள்ளப்பட்ட சட்ட மீறல்களை இராணுவச் சட்டத்தின் மூலமும் கடற்படைச் சட்டத்தின் மூலமும் பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிறுவனக் கோவை மூலமும் கையாளலாம் என பெப்ரவரி 16,2011 இல் ஆணையகத்துக்கு எழுதிய கடிதத்தில் அரசாங்கம் உறுதியளித்தது.

இக்கடிதத்தில் இராணுவ நீதிமன்றம் மற்றும் சிவில் விசாரணைகள் மூலம் இவ்வாறான விசாரணைகளை மேற்கொள்ளலாம் என இக்கடிதத்தில் அரசாங்கம் உறுதியளித்தது. எனவே இவ்வாறான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டதன் மூலம் பாதுகாப்புப் படைகளை காட்டிக் கொடுத்தது அரசாங்கம்தான். அதேசமயம் இந்த முக்கியமான காலகட்டத்தில் கஹவத்தை கொலைகள், கொலன்னாவை ஆட்கடத்தல் போன்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் நாட்டுக்கு மேலும் கஷ்டங்களை கொண்டு வருமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹைகோப் வழக்கு; பொன்சேகா விடுவிப்பு



(கொழும்பு)

ஹைகோப் நிதி மோசடி வழக்கில் இருந்து சரத்பொன்சேகாவை முற்றாக விடுவித்து கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்துள்ளது. ஹைகோப் வழக்கில் மேல் நீதிமன்றில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இராணுவ நீதிமன்ற குற்றச்சாட்டுக்களோடு ஒத்துப்போவதாகத் தெரிவித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ தீர்ப்பினை வழங்கினார்.

இராணுவ நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால் ஹைகோப் வழக்குத் தேவையற்றது என சரத் பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி குறிப்பிட்டார். இதனால் ஒரே குற்றத்திற்கு இரு நீதிமன்றில் தீர்ப்பு வழங்க முடியாது என சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார். இக்கருத்துக்களைப் பரிசீலித்த நீதிபதி சுனில் ராஜபக்ஷ, ஹைகோப் வழக்கில் இருந்து சரத் பொன்சேகாவை விடுவித்து தீர்ப்பளித்தார்.

# பொலிஸாருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

(கொழும்பு)

பொலிஸாருக்கு எதிராக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அகில விராஜ் காரியவசம் மற்றும் டாக்டர் ஜயலத் ஜயவர்தன ஆகியோரே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.



கடந்த மாதம் கொழும்பில் நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டத்தின் போது பொலிஸார் தாக்குதல் நடத்தியதாக அடிப்படை உரிமை மீறல் மனுவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் குறித்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் மற்றும் சட்ட மா அதிபர் ஈவா வனசுந்தர உள்ளிட்டோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

## 126 கொலைகள்; 104 பேர் கைது

(கொழும்பு)

கடந்த மூன்று மாத காலத்தில் நாட்டின் பல்வேறு இடங்களிலும் 126 கொலைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இது மிகப்பெரிய அதிகரிப்பு இல்லை என்று பொலிஸ் தலைமையக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

126 கொலைகள் தொடர்பாக 104 பேர் கைது செய்துள்ளதாகவும், கடந்த சில மாதங்களில் காவத்தைப் பிரதேசத்தில் மாத்திரம் ஒன்பது கொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அந்த உயரதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# தாய்லாந்துப் பெண்ணை கடத்த முயன்றவர் சிறையில்

(கொழும்பு)

தாய்லாந்துப் பெண் ஒருவரை பலாத்காரமாக முச்சக்கர வண்டியில் கடத்திச் செல்ல முயற்சித்த சந்தேகநபரை எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புறக்கோட்டைப் பகுதியில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட ஜே.ஆர். நிஷாந்த என்ற சந்தேகநபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டியில் இருந்து துறைமுகப்பகுதிக்கு முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த தாய்லாந்து நாட்டுப் பெண்ணை வேறு வழியில் கடத்த இவர் முயற்சித்துள்ளார்.



இதன்போது முச்சக்கர வண்டியின் சாரதியுடைய கழுத்தைப் பிடித்து தாய்லாந்துப் பெண் நசுக்கவே, முச்சக்கர வண்டியை கட்டுப்படுத்த முடியாமல் சாரதி நிறுத்தியுள்ளதாக பொலிஸார் சந்தேகநபர் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

இக்கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க விசேட திட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தச் சூழலினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாயச் சம்மேளனமும் பல விசேட திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் தேசிய கைத்தொழில் அதிகார சபை, ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் என்பவற்றின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட முயற்சியாளர்களுக்கு விசேட தெளிவூட்டல் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு பெண்கள் வர்த்தகக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய கைத்தொழில் அதிகார சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின்போது விசேட செயலமர்வொன்றும் தொழில் முயற்சியாளர்களுக்கான தமிழ் மொழி மூலமான வழிகாட்டல் நூல்களும் வழங்கப்பட்டன.

# யாழ். மேதினக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போதில்லை

## சஜித் பிரேமதாசா

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய மே தின நிகழ்வில் கலந்து கொள்ளப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டம் ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ள தேசிய மே தின நிகழ்வில் கலந்துகொள்ளப் போவதில்லை.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி மே தின நிகழ்வை நடத்துவதை எதிர்க்கிறேன். இதற்குப் பதிலாக ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் மே தினத்தை நடத்த வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி நடத்தும் மே தின நிகழ்வில் கலந்து கொள்வதில்லை. கொழும்பில் நடைபெறவுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் நினைவு தினத்தில் கலந்துகொள்ளவுள்ளேன் என்று கூறிவிட்டு கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ள மே தினக் கூட்டம் தொடர்பில் மாற்றுத் தீர்மானத்துக்கு இடமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.



**இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீமா இலாகி பலூச் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நேற்றுமுன்தினம் இரவு உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைபவமொன்றினை நடத்தினார். இந்த வைபவத்தில் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.**



# அக்கராயனை தனிப் பிரதேசமாக்க ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்

(கிளிநொச்சி)

அக்கராயன் பிரதேசம் தனியான பிரதேச செயலக மாக இயங்க வேண்டியதன் அவசியம் சகலராலும் உணரப்பட்டுள்ளது. இது இம் மக்களின் நீண்டகால விருப்பமும் ஆகும். எனவே எதிர்காலத் தலைமுறையினரின் நன்மை கருதி அனைவரும் இவ்விடயத்தில் ஒன்றுபட்டு செயற்பட முன்வருமிடத்து அக்கராயனின் அபிவிருத்தியை மேலும் துரிதப்படுத்த முடியும் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மீள் எழுச்சித் திட்டத்தில் அக்கராயனில் பன்னிரண்டு இலட்சம் ரூபா செலவில் மீளமைக்கப்பட்ட வைகறைமுன்பள்ளி யினை கடந்த 13 ஆம் திகதி திறந்து வைத்த பின் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்;

அக்கராயன் பிரதேசம் தனியான பிரதேசசெயலகமாக இயங்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. இவ்விடையத்திற்கு நாம் அதி முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டோம். ஆனால் சில தரப்பினர் இதறகான ஒத்துழைப்பை வழங்க முன்வரவில்லை. இச்செயற்பாடு தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைவாக குறித்த சில பிரதேசங்களையும் இவ் அக்கராயன் பிரதேசத்தோடு இணைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்கு ஏனைய அரசியல் தரப்பினரது ஒத்துழைப்பும் தேவைப்பட்டது. எனவே மக்களின் நன்மைகருதி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சென்று இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். எம்மால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இதற்காக ஒன்றுபட்டு செயற்பட அவர்கள் மறுத்து விட்டார்கள்.

எனவே இவ்விடயத்தில் அவர்கள் ஒன்றுபட்டு செயற்பட முன்வருமிடத்து இதனை விரைவாக நடைமுறைக்கு கொண்டுவர எம்மால் முடியும். ஏனெனில் கிளிநொச்சி மாவட்டத்தின் 65 வீதமான மக்கள் தொகையை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவே உள்ளடக்கியுள்ளது. எனவே இதை ஒரு பிரதேச செயலர் நிருவகிப்தென்பது மிகக்கடினமான விடயம்.

மக்கள் மேலும் குடியேறிச் செறிவாக வாழும் சூழல் உருவாகின்ற போது மக்கள் தமது செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். அத்தோடு இன்றுள்ள சூழலில் இவ் விடயம் சாத்தியப்படுமிடத்து இப்பகுதியின் அபிவிருத்தியை மேலும் துரிதப்படுத்த முடியும் என்றார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சித்திட்டத்தின் பிரதித்திட்டப்பணிப்பாளர் விஜயகிருஸ்ணன், அக்கராயன் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வசீகரி, ஈ.பி.டி.பி யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் கண்ணபிரான், கிராமசேவையாளர்களான சபாரத்தினம் மற்றும் துஸ்யந்தன் ஆகியோரும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், உறுப்பினர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தொழில் பயிற்சி

(மன்னார்)

மன்னாரில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தொழில அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் இடம் பெறுகின்றது.

அதிகார சபையின் கிராமத்திற்கு உகந்த தொழில் முயற்சி எனும் திட்டத்தின் கீழ் மன்னாரில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் சுமார் 30 பயனாளிகளுக்கு இத்தொழில் பயிற்சி வழங்கப்படுகின்றது.


மன்னாரில் அமைந்திருக்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வடமாகாண அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை காலை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதித் தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.எம்.அமீன் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஆகியோரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

## அரியாலையில் 350 குடும்பங்களுக்கு இலவச மின்சாரம்

(அரியாலை)

அரியாலை ஜே/89 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 350 குடும்பங்களுக்கு அண்மையில் இலவச மின்சார விநியோகம் வழங்கப்பட்டது.

இதில் நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவரும் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளருமான ரவீந்திர தாஸன் மின்சாரசபை ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வடமராட்சி கிழக்கில் கடற்கரையில் அமைந்துள்ள தேவாலயம் புனரமைப்பு செய்யப்பட்டு அழகுறக் காட்சியளிக்கின்றது. (142)

## குடும்பப் பெண் கொலை வழக்கு; சந்தேக நபர் பிணை கோரி மனு

(திருநெல்வேலி)

மீசாலை குடும்பப்பெண் கொலை வழக்கில் முதலாவது சந்தேக நபர் பிணை கோரி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பாக ஐந்து சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களில் ஓர் இளம் பெண் உட்பட நால்வர் ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வருடம் பங்குனி மாதம் 6ஆம்திகதி குகதாஸ் சாந்தி (வயது - 39) என்பவரே மீசாலையில் வைத்து கொலை செய்யப்பட்டார். அவரது கணவரான செல்லத்துரை குகதாஸ் (வயது-46) என்பவரே பிணை கோரி விண்ணப்பித்த சந்தேக நபராவார்.

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக தாம் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதால், பிணைச் சட்டம் 17ஆவது பிரிவின் கீழ் தனக்குப் பிணை அனுமதி வழங்கவேண்டும் என சட்டத்தரணி ஷர்மினி விக்கினேஸ்வரன் மூலம் அவர் பிணை மனுத்தாக்கல் செய்துள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இம்மனுவில் எதிர் மனுதாரர் களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (137)

## மாட்டு வண்டி சவாரிச் சங்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த மாவட்ட மாட்டுவண்டில் சவாரி சங்கம் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த கால அனர்த்தங்களால் சிதைவுற்று இயங்கமுடியாத நிலையில் இந்தச் சங்கம் இருந்து வந்துள்ளது.

இந்தச் சங்கத்தை மீளவும் புனரமைப்புச் செய்து அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக இயங்க வைக்க வேண்டுமென்று அந்தச் சங்கச் செயலாளர் மணியம் விடுத்த கோரிக்கைக்கமைவாக கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டலுவலரால் சங்கத் தினைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபபட்டிருந்தது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் மீள்புனரமைப்புக் கூட்டம் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட கலாசார அலுவலகர் மாவட்ட விளையாட்டு அலுவலக கலாசார உத்தியோகத்தர்கள், விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டுப் பயிற்றுநர்கள் முல்லை மாவட்ட சவாரியில் ஈடுபடும் போட்டியாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தச் சங்கத்திற்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட கலாசார அலுவலரது மேற்பார்வையில் பதிவற்குட்படுத்தப்படுதல். கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு சவாரி மாடு கொண்டுசெல்வதற்கான அனுமதி வழங்குதல், மேலும் சவாரி என்ற பெயரில வேறுமாவட்டங்களுக்கு வேறு தேவைகளுக்கு மாடு கொண்டு செல்லுதல் தவறானது அதனைத் தடுப்பதற்கான முற்சிகள் மேற் கொள்ளப்படல் வேண்டும் என பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்காக சங்கம் விநியோகிக்கும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் அனுமதி பெறப்படுதலும், கொண்டு சென்ற மாடுகள் மீளவும் உரிய இடம் வந்தமையை சங்கம் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (142)

## பேருந்துகளின் சமாந்தர ஓட்டம்; அச்சத்தில் உறையும் பயணிகள்

(புதுக்குடியிருப்பு)

ஏ-9 வீதி அகலிக்கப்பட்டு அதன் பின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, காப்பெற் இடும் பணிகள் ஓரளவு முடிவடைந்த இடங்களில் சில தனியார் பேருந்து ஓட்டுநர்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதாகச் சுட்டிக்காட்டுப்படுகிறது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது; கடந்த புதன்கிழமை அதிகாலை யாழ். நகரில் இருந்து முல்லைத்தீவு மறறும் வவுனியா நோக்கிப் புறப்பட்ட தனியார் பேருந்துக்கள் இரண்டு பளைக்கும் புதுக்காட்டுச் சந்திக்கும் இடைப்பட்ட 'காபபெற்' போடப்பட்ட வீதியில் ஒன்றை ஒன்று முந்துவதற்காக சமாந்தரமாக போட்டி போட்டு ஓடியுள்ளன.

இதேவேளை, இந்தப் பேருநதுக்களின் சமாந்தர ஓட்டத்தின் போது எதிரே எந்தவித வாகனங்களும் வாராததனால் ஆபத்து ஏற்படவில்லை. இவ்விரு பேருந்து ஓட்டடுநர்களின் செயற்பாட்டை பேருந்துள் இருந்த சிலர் கேலி செய்து சிரித்துள்ளதோடு, வேறு சிலர் ஆத்திரத்தில் பேசியுமுள்ளனர்.

பாதை சீரின்மை காரணமாக அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாகச் சுட்டிககாட்டப்பட்டதை அடுத்து அரசாங்கம் குறிப்பிட்ட பாதையைப் புனரமைத்துத்தர இவ்வாறு சில ஒட்டுநர்கள் பயணிகளின் உயிரைக் கருத்தில் கொள்ளாது அதிக வேதனத்துக்காக இப்படிப் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வது கண்டிக்கத்தக்க விடயமென அந்தப் பேருந்துகளில் பயணம் செய்த பயணிகள் பலரும் தெரிவித்தனர். (138)

## உலக உணவு விநியோகம் குறித்து கூட்டுறவுச் சங்கங்கள் கலந்துரையாடல்



உலக உணவு விநியோகம் தொடர்பாக வட மாகாணததிலுள்ள 47 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மற்றும் கூட்டுறவுத்துறை சார் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிறந்த குடும்ப வாழ்வுதான் தமிழரின் உயர் விழுமியம்

## சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்

(யாழ். நிருபர்)

சிறந்த குடும்ப வாழ்வுதான் தமிழர்களின் உயர்விழுமியமாகும். குடும்ப வாழ்வில் விரிசல்ஏற்பட்டால் நிம்மதி காணாமல் போய்விடும். பெண்கள் குடும்ப வாழ்வில் தங்கள் கடமைகளைச் சரியாகச்செய்து கணவன், பிள்ளைகளின் நன்மதிப்பைப்பெற்று நல்ல குடும்பத்தலைவிகளாக விளங்கவேண்டும்.

இவ்வாறு கடந்த வாரம் யாழ்.மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினவிழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் குறிப்பிட்டார்.

பெண்கள் சமூகம் வளர்ச்சியடைந்து தங்கள் உரிமைகளை சட்ட மூலமாகவும், சமூக அந்தஸ்து மூலமாகவும் பெற்றிருக்கிறார்கள். அதற்குச் சாட்சியாக அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள் எங்கும் பெண்களின் ஆதிக்கமே அதிகரித்துவருகிறது. அரச உயர்பதவிகள் அனைத்திலும் பெண்களின் ஆட்சி நடைபெறுகிறது. இத்தகைய சூழ்நிலையில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

பெண்கள் வேலைக்குச் செல்வதால் அவர்களின் குடும்ப வாழ்வில் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. அலுவலகங்களில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உரிமைகள் மட்டுமின்றி விடுதலையும் பெற்றுவிட்ட பெண்கள் வீட்டிலும் சரி அலுவலகங்களிலும் சரி தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும். மாதர் அறங்கள் முன்னர் இருந்ததை விட மேன்மையுறச்செய்யவேண்டுமென்பது பாரதியின் கனவு பாரதியின் கனவு. நனவாக வேண்டுமானால் பெண்கள் அதறகுத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குடும்ப வாழ்வில் ஆணும்பெண்ணும் கூடிய கவனம் எடுக்கவேண்டும். பெண்கள் தங்கள் வேலைப்பளுவினால் பிள்ளைகளைக் கவனிக்க முடியாமல் போகிறது. இதனால் பிள்ளைகள் நெறிதவிர்ந்த வாழ்விற்கு கட்டுப்பாடின்றிச் செல்லும் சூழல் ஏற்படுத்தப்படுகிறது. இதற்குக்காரணம் குடும்பத்தில் பெண்கள் பிள்ளைகளைக் கவனிக்க முடியாமல் இருப்பதுதான்.

பெண்களின் செயற்பாடுகள் ஆண்களிடம் சகோதர உணர்வை ஏற படுத்துபவையாக இருக்க வேண்டும். சினிமா நடிகைகள் போன்று பெண்கள் வெளிப்பகட்டுக்காட்ட வேண்டுமென்று நினைத்தால், விளைவு விபரீதமாகவே அமையும்.

தாயைத் தெய்வமாக வழிபடுதல் தமிழர்களின் உயர்ந்த பண்பாகும். இதிகாசங்கள் பெண்மையை, தாய்மையைப் போற்றி நிற்கின்றன. உயர்ந்த பெண்மைக்குணத்தை காத்து நிற்கவேண்டும் என்பதுதான் எமது தமிழ்ப்பெண்களுக்கு இன்றைய மகளிர் தினத்தில் எனது வேண்டுகோளாகும் எனவும் குறிப்பிட்டார். (10)

## சட்டவிரோத மணல் அகழ்வு

(மன்னார்)

மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் பொலிஸ் நிலைய விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் அகழ பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் 6 டிரக்டர்கள் என்பவற்றை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர். கைதான சந்தேகநபர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மன்னாரில் எண்ணெய் அகழ்வு; கடற்படுக்கை துண்டங்கள் குத்தகைக்கு

(மன்னார்)

மன்னார் கடற்படுகையில் மேலும் ஒரு பகுதியை எண்ணெய் ஆய்வுக்கு உட்படுத்துவது தொடர்பாக சர்வதேச அளவில் கேள்விப்பத்திரங்களை கோருவதற்கு அரசு தயாராகி வருவதாக பெற்றோலிய மூல வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் சாலிய விக்ரமசூரிய கூறினார்.

மன்னார் கடறபடுகையிலுள்ள பிரிக்கப்பட்ட துண்டுகளில ஒன்றுக்காக அடுத்த மூன்று மாதங்களுக்குள் கேள்விப்பத்திரங்கள் கோரப்படலாம். இம் முறை பலத்த போட்டியிருக்கும் என நினைக்கிறேன். ஆழமான துண்டுகளில் ஆய்வு நடத்த நாம் அவசரப் படவில்லை. ஆழம் குறைந்த கரையை அண்மித்த துண்டுகளுக்காகவே இந்தக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படும் என விக்ரமசூரிய கூறினார். இலங்கையைச் சூழ இத்தகைய 15 துண்டுகள் உள்ளன. இவற்றுள் 10 மன்னார் கடற்படுகையில் உள்ளன. "கெயர்ன் இந்தியா" நிறுவனம் மன்னார் படுகையில் உள்ள 3 துண்டுகளில் கிணறுகளைத் தோண்டி அவற்றில் இரண்டில் இயற்கைவாயு மற்றும் திரவ ஐதரோ காபன் இருப்பதற்கான சாத்தியம் உள்ளதாக கண்டறிந்துள்ளது. இந்த எண்ணெய் ஆய்வில் பங்கு கொள்ள இந்திய அரசாங்கம் பெரிதும் ஆர்வம் காட்டி வருவதாக விக்ரமசூரிய தெரிவித்தார்.

# மாணவர்களின் கல்வி ஆர்வம் எதிர்காலத்தை பிரதிபலிக்கின்றது

## – யாழ். மறைமாவட்ட ஆயர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாணவர்கள் கல்விக்கே முன்னுரிமை கொடுத்து வருகின்றார்கள். அவர்களின் கல்வித்திறன் அபரிதமாக இருப்பதாக யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

யாழ். வேம்படி மகளிர் பாடசாலையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற "மகிழ்ச்சியான வாழ்வு" என்னும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில், மாணவர்களின் எதிர்காலக் கல்விக்கு புத்தகங்கள் சிறந்த நண்பர்களாக இருக்கிறன. கல்வித்துறையில் மகிழ்ச்சியான வாழ்வு ஏற்படுகின்றது. எல்லோரும் மகிழ்ச்சியை விரும்புகின்றோம் அனைத்து மதங்களும் மகிழ்ச்சியாக வாழ்வதறகுரிய வழிவகைகளைச் சொல்லிக் கொடுக்கின்றது. உண்மையில் யாழ்.மாணவர்கள் கல்வியில் காட்டகின்ற ஆர்வம் அவர்களின் எதிர்காலத்தைப் பிரதிபலிக்கின்றனவாக இருக்கின்றது என்றார்.

# கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்தெரிவு

(பருத்தித்துறை)

வடமராட்சி புலோலி கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் நாளை முற்பகல் 10 மணிக்கு சங்க காரியாலயத்தில் தலைவர் து.சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.கே.அருந்தவநாதனும் கௌரவிருந்தினராக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசீகரனும் கலந்து கொள்ளவுள்ளனர். இக் கூட்டத்தில் பழுதடைந்த தீவனங்கள், மருந்துப் பொருட்கள் போன்றவற்றை நீக்குவது தொடர்பாகவும்கெயர் நிறுவனத்தின் கோழிக்குஞ்சு விநியோகத்தின் போது ஏற்பட்ட இழப்பை பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் சீர் செய்வது தொடர்பாகவும் ஆராயப்படும்.

எனவே தகைமையுள்ள அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்க செயலாளர் செ. சுபேந்திரா அறிவித்துள்ளார். (116)

# 19 கிலோ கிராம் கஞ்சாவுடன் கைது

(சம்மாந்துறை)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தைச் சந்தியில் நேற்று அதிகாலை 19 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சாப் பொதிகளை கடத்திச் சென்ற காரொன்றினை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ள அதே வேளை, காரின் சாதியையும் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலினைத் தொடர்ந்து, பொலிஸ பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இக் கஞ்சாப்பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இக்கஞ்சாப் பொதிகள் தனமல்வில பிரதேசத்திலிருந்து கல்முனைப்பிரதேசத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில்; பூநகரி கமநல சேவை நிலையம் ஏற்பாடு

(முழங்காவில்)

பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த வறிய நிலையில் வாழ்க்கை நடத்தும் விவசாயிகளின் பிள்ளைகள் இருபது பேருக்கு 25ஆயிரம் ரூபா தொகை கொண்ட புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் சென்ற வாரம் நடைபெற்ற கமநலச் சேவை நிலைய மாதாந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இம்முறை பூநகரிப்பகுதியில் அமோக விளைச்சல் கிடைத்ததைத் தொடர்ந்து ஒவ்வொரு விவசாயிடமிருந்து ரூபா நூறு முதல் ஐநூறுவரை நன்கொடையாக பெறப்படவுள்ளது.

பொருத்தமான மாணவர்கள் பாடசாலை அதிபர் கிராமமட்ட கமக்கார அமைப்பு கமநலச் சேவை நிலையப் பிரதிநிதிகளின் பரிந்துரையுடன் தெரிவு செய்யப்படுவார்களென பூநகரி கமநலச்சேவை அலுவலர் ந.சுந்தரமூர்த்தி தெரிவித்தார். (112)

# பயணிகள் அவலம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இ.போ.ச. சாலையிலிருந்து தூர இடங்களுக்கு சேவையிலீடுபடும் பேருந்துகள் இடையிடையே பழுதடைந்து வீதியில் தரித்து நிற்பதால் பயணங்களை மேற்கொள்வோர் தாம் கஷ்டங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு-வவுனியா ஆகிய இடங்களுக்குச் செல்லும் பேருந்துகளே இவ்வாறு இடைநடுவில் பழுதடைந்து காணப்படுவதாகத்தெரிவிக்கும் பொதுமக்கள தாம் உரிய நேரங்களில் செல்ல முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். (100)

# சர்வதேச பொம்மலாட்ட தினம்

(அம்பலாங்கொடை)

சர்வதேச பொம்மலாட்ட தினம் எதிர்வரும் 21 ஆம் திகதி அம்பலாங்கொடை தர்மாஷோக்க வித்தியாலய மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது. கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்கவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பொம்மலாட்ட சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. பொம்மலாட்டம் பற்றிய சொற்பொழிவினை பேராசிரியர் திஸ்ஸ காரியவசம் பொம்மலாட்ட கலைஞர் ஜீ. பிரேமின் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.


இதனைத் தொடர்ந்து மாலை 4 மணி முதல் 6 மணிவரை பொம்மலாட்ட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. சர்வதேச பொம்மலாட்ட தினத்தை கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் அம்பலாங்கொடை பிரதேச சபை ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்துள்ளன.

# அச்சுவேலி துர்க்காதேவிக்கு இன்று எண்ணெய்க்காப்பு

(வடமராட்சி)

இராசவீதி-அச்சுவேலி அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது. உத்திராட நட்சத்திரமும் ஏகாதசித்திதியும் அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரையுள்ள மீனலக்ன சுபமுகூர்தத்தில் மகாகும்பாபிஷேகம் மூலமூர்த்திகளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை எண்ணைக்காப்பு மூலமூர்த்திகளுக்கு சாத்துதல் நடைபெறும். (116)




கிளிநொச்சி - அக்கராயன் புனித அந்தோனியார் முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், ஈ.பி.டி.பி கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான தவநாதன் பிரதேச சபை உறுப்பினர் சபாநாயகம், ஸ்கந்தபுரம் தபால் அதிபர் சிறிதரன் உட்பட விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் வரவேற்கப்படுவதையும் மழலைகளின் வினோத உடை நிகழ்வையும் காணலாம்.

# பிரதேச செயலக விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கௌரவ விருந்தினராக யாழ்.ஹாட்லிக் கல்லூரி அதிபர் ந.தெய்வேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

# சண்டிலிப்பாய் கோட்ட மெய்வல்லுநர் போட்டி

(சண்டிலிப்பாய்)



சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்றது.

சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்து கொள்கின்றார்.

போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் உரியநேரத்துக்கு முன்பு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சென்.ஜோன்ஸ் - மத்திய கல்லூரி ஒரு நாள் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

சென்.ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான பத்தாவது ஆண்டாக இடம் பெறும் ஒரு நாள் போட்டி இன்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று நாள் இனிங்ஸ் போட்டித் தொடர்ந்து இடம்பெறும் இந்தப் போட்டி ரசிகர்கள் மத்தி யில் பெரும் ஆதரவைப் பெற் றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியை பார்வை யிடச் செல்வோருக்கான சில அறிவுறுத்தல்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபரினால் விடுக்கப்பட்டது.

அதன்படி, கச்சேரியில் பழைய ஓல்பாக் வீதி இன்றைய தினம் முற்றாக மூடப்பட்டிருக்கும் என்றும், அந்தவீதியில் அமைந்திருக்கும் சென்.ஜோன் கல்லூரி யின் வாயிலூடாகவே பார்வை யாளர்கள், போட்டிகளைக் காண உள்வர முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, மேற்படி இரு அணிகளுக்குமிடையிலான மூன்று நாள் இனிங்ஸ் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# துணுக்காய் கல்வி வலய உள்ளக விளையாட்டு முடிவுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய கல்விக்கோட்டங்களுக் கிடையில் கடந்த வாரம் மாங்குளம் மகா வித்தியாலயத் திடல்களில் நடைபெற்ற உள்ளக விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

***பூப்பந்தாட்டம் - ஆண் 15 வயதுப் பிரிவு***

முதலாமிடம் - ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - யோகபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - மல்லாவி மத்திய கல்லூரி.

***பூப்பந்தாட்டம் - பெண் 15 வயதுப் பிரிவு***

முதலாமிடம் - பாலிநகர் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் - வன்னி விளாங்குளம் அ.த.க பாடசாலை, மூன்றாமிடம் - மல்லாவி மத்திய கல்லூரி.

***பூப்பந்தாட்டம் - ஆண் 19 வயதுப் பிரிவு***

முதலாமிடம் -வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் - மல்லாவி மத்திய கல்லூரி மூன்றாமிடம் - யோகபுரம் மகாவித்தியாலயம்.

***பூப்பந்தாட்டம் - பெண் 19 வயதுப் பிரிவு***

முதலாமிடம் -ஒலுமடு தமிழ் வித்தியாலயம், இரண்டாமிடம் - மாங்குளம் மகாவித்தியாலயம, மூன்றாமிடம் - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

***கரம் - ஆண் 15 வயதுப் பிரிவு***

முதல்ாமிடம் - யோகபுரம் மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - மல்லாவி மத்திய கல்லூரி. மூன்றாமிடம் - வன்னி விளாங்குளம் அ.த.க பாடசாலை.

***கரம் - பெண் 15 வயதுப் பிரிவு***

முதலாமிடம் - ஐயங்குளம் அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் - நட்டாங்கண்டல் . மூன்றாமிடம் - யோகபுரம் மகாவித்தியாலயம்.

***கரம் - ஆண் 19 வயதுப் பிரிவு***

முதலாமிடம் - யோகபுரம் மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - மல்லாவி மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - வன்னி விளாங்குளம் அ.த.க பாடசாலை.

***கரம் - பெண் 19 வயதுப் பிரிவு***

முதலாமிடம் - யோகபுரம் மகா வத்தியாலயம், இரண்டாமிடம் - மல்லாவி மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - ஒட்டு சுட்டான மகாவித்தியாலயம். (42)

# 7 கோல்கள் போட்டு சென்.அன்ரனீஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை லீக் அனுசரணையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனீஸ் உதைபந்தாட்ட அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டு அரங்கில் நடைபெற்று வரும் இரண்டாம் சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனீஸ் உதைபந்தாட்ட அணி கம்பர் மலை ஐஸ்கம்பன்ஸ் அணியை எதிர்த்து மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனீஸ் முதல்கோல் போட்டது.

இடைவேளைக்குப் பின்னர் முன்னிலை வகித்து வந்த சென்.அன்ரனீஸ் அணி இடைவிடாது கோல்களைப் போட்டு வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இன்று இடம்பெறும் போட்டியில் மாலுசந்தி உதைபந்தாட்ட அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. 36 போட்டியில் 26 கழகங்கள் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# டோனி - சேவாக் மோதல் முடிவு என்கிறார் கங்குலி

(கொல்கத்தா)

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் டோனி மற்றும் தொடக்க ஆட்டக்காரரான விரேந்திர சேவாக் இருவருக்குமிடை யேயான மோதல் தற்போது முடிந்து விட்டதாகவும் இருவரும் தங்கள் கருத்து வேறுபாடுகளை பேசித் தீர்த்துக் கொண்டதாகவும் முன்னாள் கப்டன் கங்குலி கூறியுள்ளார்.

நிருபர்களிடம் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கங்குலி தான் சமீபத்தில் சேவாக்குடன் பேசியதாகவும் அப்போது டோனியுடனான அனைத்து பிரச்சினைகளும் பேசித் தீர்க்கப்பட்டதாக சேவாக் கூறியதாக கூறினார்.

ஆசிய கோப்பைக்கான இந்திய அணிக்கு சேவாக் தேர்ந்தெடுக்கப்படாதற்கு கூட டோனியுடனான மோதலே காரணம் எனக் கூறப்பட்ட நிலையில் கங்குலி இவ்வாறு கூறியுள்ளார். மேலும் மனோஜ் திவாரி மற்றும் அஷோக் திண்டாவுக்கு டோனி வாய்ப்பளிப்பார் என தான் நம்புவதாகவும் கங்குலி தெரிவித்தார்.

# உலக கிண்ண ருவென்ரி 20 ஆப்கானிஸ்தான் அணி தகுதி

உலகக் கிண்ண ருவெனரி - 20 தகுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி, டென்மார்க்கை 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

உலகக் கிண்ண ருவெனரி -20 தகுதிப் போட்டி சார்ஜாவில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏ பிரிவு லீக் போட்டியில் ஆப்கானிஸதான், டென்மார்க் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. ஆப்கானிஸ்தான் சார்பில் சாதிக் 91 ஓட்டங்கள் எடுத்தார். மங்கல் 22, நபி 15 ஓட்டங்களும் எடுத்தனர். 20 ஓவரில், 5 விக்கெட்டுக்கு 172 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்த களமிறங்கிய டென்மார்க் அணியின் மகமூத் 25 ஓட்டங்கள் எடுத்தார், மற்றவர்கள் சோபிக்கவில்லை. 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 83 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. ஆட்ட நாயகன் விருதை ஆப்கனின் சாதிக் பெற்றார்.

அபுதாபியில் நடந்த மற்றொரு பி பிரிவு போட்டியில் அயர்லாந்து அணி(104/8) 2 விக்கெட் வித்தியாசத்தில் இத்தாலி அணியை(100/7) வென்றது.

துபாயில் நடந்த மற்றொரு ஏ பிரிவு போட்டியில் கனடா அணி(84/2), 8 விக்கெட் வித்தியாசத்தில் ஹாங்காங் அணியை (81/8) வீழ்த்தியது.

# தமிழகத்தின் எதிரும் புதிருமான கட்சிகளின் ஒருமித்த கருத்து!

(சென்னை)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தினை இந்தியா ஆதரிக்கத் தவறினால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தால் நீடிப்பது தொடர்பாக தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்படும் என திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.


இந்த விடயம் குறித்து தமது கட்சியின் செயற்குழுவில் ஆராயப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை மீதான பிரேரணைக்கு இந்தியா தனது ஆதரவை வழங்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் கோரிக்கைவிடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் எதிரும் புதிருமான பாரிய இரண்டு கட்சி களும் ஜெனிவா தீர்மானம் தொடர பாக ஒருமித்த கருத்தினை வெளிப்படுத்தியுள்ளன.




## ஜெயலலிதாவும் கருணாநிதியும் இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர்

### பா.ம.க. ராமதாஸ் விமர்சனம்



(விழுப்புரம்)

ஈழத் தமிழர்களை போரின் போது காப்பாற்றாது தற்போது இவர்கள் இருவரும் தான் ஈழத் தமிழர்களைக் காக்க, புதிய அவதாரம் எடுத்தவர்கள் போல் நாடகமாடுகின்றனர் என பா.ம.க தலைவர் ராமதாஸ் விமர்சித்துள்ளார். இது பற்றி மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் இறுதிக்கட்ட போரின்போது, உலகில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை, கொத்து, கொத்தாகப் போட்டு, ஈழத் தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். உலகத் தமிழர்கள், இதைத் தடுத்து நிறுத்தும்படி கூக்குரலிட்டனர். ஆனால், கருணாநிதியோ காலை உணவை முடித்துக் கொண்டு, உண்ணாவிரதம் இருந்தார்.

மூன்று மணி நேர உண்ணாவிரதத்திற்குப் பின், மதிய உணவு நேரத்தின்போது, போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டது என்று கூறி முடித்துக் கொண்டார். ஆனாலும், தொடர்ந்து குண்டு வீசப்படுகிறதே என நிருபர்கள் கேட்டபோது, மழை விட்டும் தூவானம் விடவில்லை என கூறியவர் தான் கருணாநிதி. ஜெயலலிதாவோ இரு தரப்பினரிடையே போர் நடக்கும்போது, அப்பாவி மக்கள் சிலர் கொல்லப்படுவது இயல்பு என கூறினார். இப்போது, அமெரிக்கத் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா செயல்பட வேண்டும். இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிப்பதாக மத்திய அரசு உறுதி அளிப்பதைத் தவிர, வேறு எந்த அறிவிப்பாலும் எங்களைச் சமாதானப்படுத்த முடியாது என்று நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கூறியுள்ளார் எனத் தெரிவித்தார்.

## போலிக் கடவுச்சீட்டு விவகாரம் புரோக்கர் திருச்சியில் கைது

திருச்சியைச் சேர்ந்த இரண்டு இலங்கை வாலிபர்களுக்கு, போலியான சான்றுகள் மூலம் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுத்த புரோக்கரை, டில்லி பொலிஸார் கைது செய்து, விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

இலங்கைத் தமிழரான தயானந்தன் (வயது - 28) சுதாகரன் என்கிற சுதீப் (வயது-30), இவரும் இலங்கையிலிருந்து வந்தவர். இருவரும், பிரான்ஸ் செல்லத் திட்டமிட்டனர்.

இதையடுத்து, திருச்சியைச் சேர்ந்த புரோக்கர் ஒருவர் மூலம், கடவுச்சீட்டு எடுத்து, டில்லி விமான நிலையத்திலிருந்து பிரான்ஸ் செல்ல, டிக்கெட் எடுத்திருந்தனர். சில நாட்களுக்கு முன், தயானந்தனும், சுதீப்பும், டில்லி விமான நிலையத்திலிருந்து, பிரான்ஸ் செல்ல முயன்றபோது, அவர்களது கடவுச்சீட்டு போலியான ஆவணங்கள் மூலம் எடுக்கப்பட்டது என்பதை, குடியுரிமை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

விசாரணையில், இருவருக்கும் போலியான ஆவணங்கள் மூலம் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுத்தது, திருச்சி காந்தி மார்க்கெட் பகுதியைச் சேர்ந்த புரோக்கர் செல்வேந்திரன் என்பது தெரியவந்தது.

## இலங்கைத் தூதரை வெளியேற்ற வேண்டும்

### என்கிறார் டி. ராஜா-

(புதுடில்லி)

தமிழக எம்.பி.க்கள் பற்றி வரம்பு மீறி அவதூறாகப் பேசிய இலங்கைத் தூதர் பிரசாத் கரியவசத்தை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி. ராஜா வலியுறுத்தினார். இது தொடர்பாக நிருபர்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி. ராஜா கூறியதாவது;

இராஜதந்திரப் பணிக்காக இந்தியாவுக்கு வந்துள்ள இலங்கைத் தூதர் தமது பதவியின் வரம்பை மீறி தமிழக எம்.பி.க்கள் பற்றி விமர்சித்துள்ளார். இலங்கைக்கு எதிரான தீர்மான விவகாரத்தை நாடாளுமன்றத்துக்கு உள்ளே தமிழக எம்.பி.க்கள் எழுப்பி வருகின்றனர். அது தொடர்பான விளக்கத்தை மத்திய அரசு அளித்துள்ளது. இந்தியாவின் நிலை பற்றியும் உறுப்பினர்கள் வலியுறுத்தி பேசி வருகிறார்கள். இவை அனைத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை சார்ந்த விஷயம். அதில் தலையிட இலங்கைத் தூதருக்கு யார் அதிகாரம் கொடுத்தது? தமிழக எம்.பி.க்களைப் பற்றி ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்க இவர் யார்? அவரது செயல் கண்டிக்கத்தக்கது. அவர் மன்னிப்புக் கேட்டதாகச் செய்திகள் வருகிறது. மன்னிப்புக் கேட்டால் எல்லாம் சரியாகி விடுமா? இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என கௌரவமும் மரியாதையும் உள்ளது. அதை இழிவுபடுத்தும் வகையில் சர்ச்சைக்குரிய கருத்தை இலங்கைத் தூதர் வெளியிடுவார். பின்பு மன்னிப்புக் கேட்டவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமாதானம் அடைய வேண்டுமா? எங்களுக்கு அவரது மன்னிப்பு போதாது. வரம்பு மீறிப் பேசிய இலங்கைத் தூதரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும். இலங்கைத் தூதரின் செயல் பற்றி இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவைச் சந்தித்து புகார் கொடுத்துள்ளேன் என டி. ராஜா தெரிவித்துள்ளார்.

## வருமானத்திற்கு அதிகமாக சொத்து துணை மாவட்ட அதிகாரி கைது

(மும்பை)

மகாராஷ்டிராவைச் சேர்ந்த துணை மாவட்ட அதிகாரி, 118 கோடி ரூபாய்க்கு சொத்து சேர்த்தது தொடர்பாக, கைது செய்யப்பட்டுள்ளார்.

மகாராஷ்டிராவில், 1988ஆம ஆண்டு முதல் கடந்த ஆண்டு வரை, பல்வேறு மாவட்டங்களில் துணை மாவட்ட அதிகாரியாகப் பணியாற்றியவர் நிதிஷ் தாக்கூர். கடந்த ஆண்டு பெப்ரவரியில், கட்டுமான நிறுவன உரிமையாளரை மிரட்டியது தொடர்பாக, நிதிஷீம், அவரது சகோதரரும் கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து, நிதிஷ் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். அன்று முதல், ஊழல தடுப்புப்பிரிவு அதிகாரிகள் நிதிஷின் சொத்துகளைக் கண்காணித்தனர்.



மகாராஷ்டிராவின், எட்டு நகரங்களில், 26 இடங்களில், 118 கோடி ரூபாய் அளவுக்கு, நிதிஷ் சொத்து சேர்த்துள்ளது தற்போது, கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, அவரை கைது செய்யச் சென்ற போது, மும்பையின் வில்லி பார்லி பகுதியில் உள்ள சொகுசு பங்களாவிற்கு சென்று அவர் தாழிட்டுக் கொண்டார்.

ஊழல் தடுப்பு அதிகாரிகள், கதவை உடைத்து சென்று, அவரைக் கைது செய்துள்ளனர். துணை மாவட்ட அதிகாரியாக பணி புரிந்த நிதிஷின் மாத வருமானம், 50 ஆயிரம் ரூபாய். ஆனால் அவர் வருவாய்க்கு அதிகமாக, பல மடங்கு சொத்து சேர்த்துள்ளதாக மகாராஷ்டிர வீட்டு வசதி துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அண்ணா நூலகத்தை இடம் மாற்றினால் தீக்குளிக்கப்போவதாக கருணாநிதி அறிவிப்பு



அண்ணா நூலகத்தை இடம் மாற்றினால் அன்றைய தினமே தக்குளிப்பேன் என தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். சங்கரன் கோவில் இடைத்தேர்தலை ஒட்டி, தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி பங்கேற்று தி.மு.க.வுக்கு ஆதரவாக வாக்குகளைச் சேகரித்து வருகிறார். இந்நிலையில் அவர் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது, நான்கு இலட்சம் புத்தகங்களுடன் வெளிநாட்டினரும் பாராட்டும் வகையில் அண்ணா நூலகத்தை ஏற்படுத்தினோம்.

ஆனால், அதனை ஆஸ்பத்திரியாக்கப் போகிறோம் என கூறுகிறார்கள். அதற்காக உச்ச நீதிமன்றம் சென்றிருக்கிறோம். உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி, நூலகத்தை இடித்தே தள்ளுவேன் என அடம் பிடித்தால், அந்தநாள், கருணாநிதி தீக்குளிக்கும் நாளாக இருக்கும். எனனைத் தொடர்ந்து எத்தனையோ பேர் நூலகத்தைக் காப்பாற்ற வருவார்கள். அவர்களை தடுத்துவிட முடியாது. பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் அமைந்த செம்மொழி தமிழாய்வு மையத்திற்கு களங்கம் ஏற்படுத்தினார்கள். பாவேந்தர், தேவநாய பாவாணர், பாரதியார் ஆகியோரது படங்களையும் அகற்றினார்கள். ஒரு ஆட்சிக்குப் பிறகு மற்றொரு ஆட்சி வரும்போது, முந்தைய ஆட்சியின் செயற்பாடுகளை மதிக்கவேண்டும். சென்னையில் வெள்ளைக்காரரர் வெலிங்டன் சிலை உள்ளிட்டவற்றை, அவர்கள் நம்மை அடிமைகளாக்கினார்கள் என்பதால் அகற்றினோம். தி.மு.க. வினரை பல்வேறு பொய்வழக்குகளில் கைது செய்து சிறைப்படுத்துகிறார்கள். தி.மு.க.,வினர் உயிருக்குப் பயப்படாதவர்கள். எங்களது இன எழுச்சியை ஒடுக்க முடியாது. எனத் தெரிவித்தார்.

## மன்னியுங்கள்!




'தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களின் பாவங்களை மன்னியும்' என்று இயேசு சிலுவையில் கூறிய வார்த்தை.

தன்னை வதைத்துத் துன்புறுத்துகிறவர்களுக்காக, அவர்களின் குற்றங்களை மன்னிக்கும் படி இறைவனிடம் பரிந்து பேசுகிறார் கிறிஸ்து.

அண்மையில் மரணமான பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் இறைமக்களைச் சந்திப்பதற்காக புனித இராயப்பர் பேராலயத்துக்கு வெளியே வந்தபோது துருக்கி நாட்டைச் சேர்ந்த அலிஅகாவை என்ற முஸ்லிம் இளைஞர் ஒருவர் தனது துப்பாக்கியால் பாப்பரசரை சுட்டார். எனினும் அவர் தெய்வாதீனமாகத் தப்பிப்பிழைத்து சுகமாகி, தன்னைச் சுட்டவரை சிறைச்சாலைக்குச் சென்று அவரை பெருமனதுடன் மன்னித்தார்.


ஆம் நாம்கூட மற்றவர்கள் மட்டில் மன்னிப்புக் காட்டி அவர்களை மன்னிக்கும் மனப்பாங்கை நம்மில் வளர்த்திருக்கின்றோம். பிறர் செய்யும் குற்றங்களை நாம் மன்னித்தால் தான் நாம் செய்யும் குற்றங்களை பிறர் மன்னிக்க முடியும்.

முதலில் நாம் பிறர் மட்டில் ஆழ்ந்த கரிசனையோடு பிறரன்பில் வாழப் பழகினால் தான் நம்மில் நல்ல மனப்பாங்கை நம்மால் வளர்த்துக் கொள்ள முடியும். ஏழு தடவை அல்ல, எழுபது தடவைக்கு மேல் மன்னிக்கும்படி கிறிஸ்து கூறுகிறார்.

நாம் இந்த நற்பண்பை நம்மில் வளர்த்து இறைவனுக்கு உகந்தவர்களாக வாழ இந்த தபசு காலத்தில் ஆண்டவனிடம் இறஞ்சுவோம்.

ஆர்.மதுசன், பாசையூர்.

# சிரியாவில் இராணுவத்தின் தாக்குதல்கள்; வீட்டிலேயே முடங்கிக்கிடக்கும் பொதுமக்கள்



சிரியாவின் மீது உலக நாடுகள் தொடர் அழுத்தங்களை கொடுத்து வருவதால், அரசு ஆதரவாளர்களின் தாக்குதல்கள் .அதிகரித்துள்ளன.


சிரியாவில் கடந்த ஓராண்டாக ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக போராட்டம் நடைபெற்று வருகிறது. ஆயுதம் ஏந்திய போராட்டக்காரர்களுக்கு மேற்கத்திய நாடுகளும் அண்டை நாடுகள் சிலவும் ஆதரவு அளித்து வருகின்றன.

இதனால் நாட்டின் ஒரு சில இடங்களில் அவர்கள் வலுப் பெற்றனர். எனினும் அரசு எதிர்பபாளர்களிடையே பிரிவினையும் உள்ளது. இந்நிலையில் தாரா நகர் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இது தொடரபாக தாரா நகரில் வசிக்கும் அபு அகமது என்பவர் வெளியே சென்றால் 'நிச்சயம் மரணம் என்ற நிலைதான் உள்ளது. எனவே வீட்டுக்குள் பதுங்கியிருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரின் இந்தத் தாக்குதலால் அரசு எதிர்ப்பாளர்கள் நிலைகுலைந்து விட்டதாகவே தெரிகிறது. எனினும் அவர்களை அரசுக்கு எதிராக ஒருங்கிணைக்க மேற்கத்திய நாடுகள் முயற்சிப்பதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் ரஷ்யா, சிரியா ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு ஆதரவாகவே உள்ளது. சிரியாவில் வன்முறையை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது குறித்து சர்வதேச சமூகம் யோசிக்க வேண்டுமென்று ரஷ்யத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# ஆப்கானை விட்டு நேட்டோவை வெளியேற உத்தரவு



ஆப்கானிஸ்தானை விட்டு நேட்டோ படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் உத்தரவிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன. இவர்கள் கிராமங்களுக்கு வெளியே முகாம்கள் அமைத்து தங்கி உள்ளனர்.

சமீபத்தில் தெற்கு மாநிலமான காந்தகாரை அடுத்த கிராமத்துக்குள் இயந்திர துப்பாக்கியுடன் நுழைந்த அமெரிக்க வீரர் ஒருவர், தன் கண்ணில் பட்டவர்களை எல்லாம் சரமாரியாக சுட்டுத் தள்ளினார். இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 16 பேர் பலியாகினர்.

இதன் காரணமாக ஆப்கானில் இருந்த அமெரிக்க படைகள் வெளியேற வேண்டும் என கூறி தலைநகர் காபூல் உட்பட பல பகுதிகளில் மக்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஆப்கான் அரசு தலிபான் பிரதிநிதிகளுடன் அமெரிக்க இராணுவத் தரப்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதை தலிபான்கள் நிராகரித்து விட்டனர். மேலும் அமெரிக்கப் படைகள் மீது ஆப்கான் அரசும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து கிராமங்கள் மற்றும் பின்தங்கிய மலையோரப் பகுதிகளில் இருந்து நேட்டோ படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் ஜனாதிபதி கர்சாய் உத்தரவிட்டுள்ளார்.

# பெல்ஜியத்தில் தேசிய துக்கதினம்



சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற பஸ் விபததில் பலியான சிறுவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பெல்ஜியத்தில் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அத்துடன் நாட்டின் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படுவதுடன் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறும் அரசாங்கம் கோரியுள்ளது.

மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ், சுரங்கப் பாதையில் மோதியமையால் விபத்து ஏற்பட்டு 22 சிறுவர்கள் உள்ளிட்ட 28 பேர் உயிரிழந்தனர். விபத்தில் உயிரிழந்த மாணவர்களை அடையாளம் காணும் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. உயிரிழந்த சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# முடிவுக்கு வந்த முரண்பாடு



பிரபல பொப்பிசைப் பாடகி மாயா அருள்பிரகாசத்துக்கும் சி. என். என் செய்தியாளர் அன்டர்சன் கூப்பருக்கும் இடையில் நிலவி வந்த முரண்பாடு முடிவுக்கு வந்து உள்ளது.

இருவரும் ருவிட்டர் சமூக இணைப்புத் தளம் ஊடாக பரஸ்பரம் தொடர்புபட்டு அபிப்பிராய பேதங்களை களைந்து கொண்டனர்.

மாயா அருள்பிரகாசத்தை தமிழ் பெண் புலி என்று அன்டர்சன் வர்ணித்து இருக்கின்றார் போலும். இலங்கை அரசால் அன்டர்சன் விலைக்கு வாங்கப்பட்டு விட்டார் என்று மாயா பதிலுக்கு தாக்குதல் நடத்தி வந்து இருக்கின்றார்.

இந்நிலையில் இருவருக்கும் இடையிலான பனிப் போர் நீண்ட காலமாக இடம்பெற்று வந்திருக்கின்றது. ருவிட்டர் ஊடாக கடந்த புதன் கிழமை தொடர்புபட்ட இருவரும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறி அபிப்பிராய பேதங்களைக் களைந்து கொண்டனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# நிபந்தனையுடன் வெளியேறத்தயார் ஏமன் முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே நாட்டை விட்டு வெளியேறுவதற்கு புதிய நிபந்தனை ஒன்றை விதித்துள்ளார்.

கடந்தாண்டு ஏமனில் ஜனாதிபதி சலேவின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தியதை தொடர்ந்து, இவர் தனது அதிகாரங்களை துணை ஜனாதிபதி மன்சூர் ஹேதியிடம் ஒப்படைத்தார்.

இந்நிலையில் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பாக இவர் வெளியிட்டு அறிக்கையில் கூறியிருப்பதாவது, ஏமனின் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருப்பவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். இது தொடர்பான ஒப்பந்தம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் அப்துல்லாவின் இந்த அறிக்கையை எதிர்ப்பாளர்கள் நிராகரித்துள்ளனர். இதுகுறித்து இளம் புரட்சியாளர் படையைச் சேர்ந்த அல் அஷாகி கூறுகையில், அப்துல்லா ஒரு பொய்யர். இப்போது வார்த்தைகளை வைத்து அவர் விளையாடத் தொடங்கியுள்ளார். அதிகாரத்தை தக்க வைக்க அவர் பல்வேறு தந்திரங்களைக் கையாளுகிறார். அதில் இதுவும் ஒன்று எனக் கூறியுள்ளார்.

# மெய்தான் பாருங்கோ...

## 'உறைப்பான' விசயங்கள்



இப்ப கிட்டடியில எங்கையோ ஒரு இடத்தில பள்ளிக்கூட வாத்தியார் ஒருவர் படிக்கிற பொடியன் ஒருவனுக்கு வகுப்பில வைச்சே நல்லாக் கையாலும் காலாலும் விளாசித்தள்ளினதா ஆரோசெல்லக்கேட்டு வந்து எனக்குச் சொன்னான் என்ர சகபாடி.

ஆனா வாத்தி, பொடியன் மேல ஏன் கையை வைச்சார்...? எண்டதுக்குப் பல காரணங்கள் இருக்கும் பாருங்கோ! ஒண்டு அவன் குழப்படிகாரனா இருந்திருப்பான். அல்லாட்டி சொல்லிக்குடுத்த பாடத்தை ஒழுங்காக் கவனமாகக் காது குடுத்துக்கேக்காமல் பிராக்குப் பாத்துக் கொண்டிருந்திருப்பான். இதை விட, பக்கத்துப்பொடியளோடை ஏதாவது சொறிசேட்டையள் விட்டிருப்பான். அதுக்கு வாத்தியார் அடிச்சிருப்பார்.

மாணவன் தவறுவிட்டால் வாத்தியாருக்குத் தண்டிக்கிறதுக்கு உரிமையிருக்குது. அதுவும் அன்போடை கூடிய கண்டிப்பாக இருக்கவேணும் பாருங்கோ. அது ஒரு அளவோடை இருக்கவேணும். அன்பு அளவை மீறிச்சுதெண்டால் குருபக்தி தேஞ்சு 'தோளுக்கு மிஞ்சின தோழன்'மாதிரிப் பொடியள் போயிடுங்கள். இதேமாதிரி கண்டிப்பெண்டது கனதியாக இருக்குமெண்டால், படிக்கிறதுகளின் மனசில வன்மமும், வைராக்கியமும் வளந்து கடைசியில அதுகள் நாட்டுக்கும், வீட்டுக்கும் உதவாத நிலையாய் போயிடுங்கள் கண்டியளே!

வகுப்பில பொடியள் குழப்படி விடுகிறது சகசம்தான். அதுக்கு ஒரு சின்னத்தடியெடுத்து நொந்தும்; நோகாதமாதி அடிக்கவேணுமே யொழிய, கையாலும் காலாலும் விளாசித்தள்ளுற அளவுக்கு விபரீதமாகப் போகக்கூடாது. அப்பிடி அடிச்சுத்தள்ளுறதுக்கு வாத்தியாருக்கு எந்த விதமான உரிமையும் அருகதையும் இல்லைப்பாருங்கோ.

ஆனா... வாத்தியார் ஏன் அப்பிடி மொக்குத்தனமா நடந்துகொண்டார்... எண்டதை கொஞ்சம் அறிவு பூர்வமாகவும் சிந்திச்சுப்பாத்தால் நல்லதல்லோ!

சிலபேர் இருப்பினம்...! கேள்விப்பட்டிருப்பியள். அவலை மனசில நினைச்சுக்கொண்டு வெறும் உரலுக்கை உலக்கையைப்போட்டு இடிச்சு உடைச்சுத் தள்ளுற ஆட்கள்... தீர்த்துக்கொள்ளமுடியாத ஏதோவொரு மனப்பாரத்தை உடம்புக்குள்ளை வைச்சுக்கொண்டு மற்றவைக்கு உபத்திரவங்களை ; அலட்சியங்களை உண்டு பண்ணுறஆக்கள்... இப்பிடிப் பட்ட ஆட்களை நான் என்ர வாழ்க்கையில நெடுகச் சந்திச்சிருக்கிறன்.

அதாலதான் பாருங்கோ! என்ர சகபாடி வந்து கதையோட கதையா வாத்தி, படிக்கிறபொடியனுக்கு உடம்பில வாங்குவாங்கெண்டு வாங்கினதாச்சொன்னதும் நான் உடன அந்த வாத்தியாருடைய மனநிலையில நிண்டு யோசிச்சுப்பாத்தன். அவனவனுக்கு வாழ்க்கையில ஆயிரம் பிரச்சினையள் வந்து போகும். தீர்க்கப்படமுடியாத பிரச்சினையெண்டால் மனம் குழப்பி... 'மத்தளம்வாசிப்பது' தவிர்க்க முடியாததாகிப்போகிடுது. என்னசெய்யிறது.

நான் இப்ப வாத்தியாற்ர பக்கத்தைப் பற்றிக்கதைக்கவாறன் எண்டால், நான் பள்ளிக்கூடத்தில படிக்கிறகாலத்தில உப்பிடித்தான் ஒரு சம்பவம் நடந்தது. சொல்லுறன் கேளுங்கோ!

அப்ப நான் நாலாம் வகுப்பு படிச்சுக்கொண்டிருந்தனான். காலையில இங்கிலிசுப்பாடம் சிவசம்பு வாத்தியார் படிப்பிக்கிறவர். ஒருநாள் வாத்திவரேல்லை. வகுப்பில எல்லாருக்கும் ஏகப்பட்ட புளுகம் கண்டியளே! எல்லாம் ஒரு கொஞ்சநேரம்தான். ஏன்தெரியுமே! வாத்தியார் அண்டைக்கு நல்லாப் பிந்திவந்திட்டார். அவர் வகுப்புக்குள்ள வந்தவுடன பொடியள் எல்லாம் அவற்ர முகத்தைப் பாத்தவுடன பயந்து போனாங்கள். அந்தளவுக்கு முகமெல்லாம் தடிச்சு வீங்கி கோபத்தில சிவந்து போய்க் கிடந்தது.

வாத்தி வந்தது வரக்குமுன்னம் கரும்பலகையில ஏதோ இங்கிலீசை எழுதிப்போட்டு ஒருபொடியனை வாசிக்கச்சொல்ல அவன் பிழையா வாசிச்சான். பூவரசங்கம்பால அவனுக்கு விழத்தொடங்கின அடி... ஒவ்வொருவராக இருபத்தாறு பேர் வரைக்கும் அந்த அடிவிழுந்து கொண்டேயிருந்தது. ஒருதரும் இதை எதிர்பாக்கேல்லை. வாத்திக்கு இண்டைக்கு என்ன நடந்ததெண்டு பக்கத்து வகுப்பில ரண்டு தையலம்மா (ஆசிரியை) க்கள் பாத்துக்கொண்டு நிண்டினம். அடியெண்டா அந்தமாதிரி அகோர அடி!

முன்வாங்கிலயிருந்தவைக்கு மூர்க்கத்தனமா அடிவிழ எனக்குப்பின்னால இருந்த காத்திகேசு எண்டவன்ர காச்சட்டையின்ர முன்பக்கம் நனைஞ்சு போச்சுப்பாருங்கோ. அந்தளவுக்கு பொடியள் நல்லாப் பயந்து போனாங்கள் கண்டியளே! வாத்தியாற்ர நல்ல காலம் அண்டைக்கு தலைமைவாத்தியார் வரேல்லை. இப்பிடியே கொஞ்சநேரம் போனாப்போலை மணி அடிச்சுது. வாத்தி அழுவாரைப் போல எழுப்பிப்போக, அடுத்தபாடத்துக்குரிய இன்னொரு வாத்தியார் வந்து எங்களை அனுதாபமாப் பாத்திட்டு "எண்னடாப்பா செய்தனிங்கள்...?" எண்டு கேட்டார்.

அதுக்கு எனக்குப் பக்கத்திலயிருந்த வீரகத்தி எண்டவன் சிவம்பு வாத்தியின்ர வீட்டுக்குப்பக்கத்தில இருக்கிறவன் எழும்பிச்சொன்னான். "அதுவாத்தியார் அவற்ர வீட்டில பிரச்சினை..." எண்டிட்டு விசயத்தைச் சொன்னான்.

. அண்டைக்குப்பாருங்கோ சிவசம்பு வாத்தியார் தன்ர மனிசிக்குச் சொல்லியிருக்கிறார் இடியப்பத்துக்கு புளிச்சொதி வைச்சுத்தரச் சொல்லி. மனி அவற்ரை பேச்சைப் பறவாய் பண்ணாமல் கொச்சி மிளகாயில சம்பல் அரைச்சுக்குடுத்திருக்கிறா.தன்ர பேச்சை மனிசி மதிக்கேல்லையெண்ட ஆத்திரத்தோட வாத்தி சாப்பிட்டிட்டு வெளிக்கிட்டு, வாசிகசாலையில பேப்பர் பாத்திட்டு, பங்குனிமாத வரத்துவெய்யிலத்துக்குள்ளால வந்திருக்குது. கொச்சிமிளகாய்க்காரம் வாய்வயிறெல்லாம்பத்தி எரியவகுப்பில இருந்த (நானும் உட்பட)பொடியள் எல்லாம் அவற்ர மனிசி மாதிரித்தெரிஞ்சிருக்கவேணும் போல. அதுதான் மனிசன் 'ஊழித்தாண்டவம்' ஆடிப்போட்டு ஒதுங்கிப்போயிருக்குது.

இதேமாதிரித்தான் பாருங்கோ!. என்ர சகபாடி வந்து சொன்ன பிரச்சினையிலும் வாத்தியாருக்கு ஏதாவது 'காரமான பிரச்சினை' இருந்திருக்கும். அதுதான் கையாலும், காலாலும் விளாசியிருக்கிறார் போலகிடக்குது. திடீரெண்டு எழுந்தமானமா ஒருவர்மீது குற்றம் சாட்டக்கூடாது. ஏனெண்டா அவையளுக்குள்ளும் கொச்சிச்சம்பல் பிரச்சினையள் எத்தனை குவிஞ்சு கிடக்கோ ஆர் கண்டது?

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# அரசியற் தவறுகளிலிருந்து பாடம் கற்க தமிழ்த் தலைமைகள் முன்வரவேண்டும்

வாய்ப்புகள் எந்தச் சூழலிலும் ஏற்படும். அவற்றைக் கையாள்வதன் மூலமாகவே வெற்றியும் தோல்வியும் அமைகின்றன. வாய்ப்புகளைக் கையாள்வதன் மூலமே ஒரு தலைமைத்துவத்தின் சிறப்பும் ஆளுமையும் புலப்படும்.

மேலும் ஒரு சிறப்பான தலைமை தனக்கான வாய்ப்புகளை உருவாக்குவதுமுண்டு. அல்லது கிடைக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தன்னுடைய வெற்றியை அது உறுதி செய்து கொள்ளும். அதுவே வரலாற்றில் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினருக்கு அந்தத் தலைமை வழங்குகின்ற நன்றிக்கடனும் பங்களிப்புமாகும். அந்தத் தரப்பு மக்களுக்கு அந்தத் தலைமை அளிக்கின்ற கௌரவமுமாகும்.

மக்கள் எதற்காகத் தங்களுக்கான தலைமைகளை உருவாக்குகிறார்கள்?

தங்களுடைய நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவுமே அவர்களுக்குத் தலைமைகள் தேவைப்படுகின்றன. மேலும் சமூகப் பாதுகாப்பிற்காகவும் அடையாளத்திற்காகவும். இந்த அடையாளம் கௌரவத்தையும் மதிப்பையும் மாண்பையும் கொண்டது.

வெற்றிபெறும் தலைமைகளை, ஆளுமையுடைய தலைமைகளை, மதிப்பும் மாண்புமுடைய தலைமைகளை, வியப்புகளை ஏற்படுத்தும் தலைமைகளையே மக்கள் தங்களுடைய அடையாளமாகக் கொள்கின்றனர். அந்தத் தலைமைகள் அவர்களைப் பொறுத்தவரை ஒரு நிழல் விருட்சமாகவும் கனி மரமாகவும் விரிந்த வானமாகவும் குளிர் ஊற்றாகவும் அமைந்திருக்க வேண்டும்.

வரலாறு நெருக்கடிகளையே அதிகமாகத் தன் மடியிற் கொண்டது. இயற்கை நெருக்கடியும் சமூக நெருக்கடியும் கலந்தது மனித வரலாறு. இந்த இரண்டு நெருக்கடிகளையும் கடந்து வந்ததும் அதே மனித வரலாறே.

தன் முன்னேயிருக்கும் அல்லது தன்னை நோக்கி வருகின்ற நெருக், கடிகளை வென்று முன்னேறுவதே தலைமைகளின் கடமை. மனித குலத்தை முன்னகர்த்தி வந்த தலைமைகள் இத்தகைய பண்பைக் கொண்டவையே.

ஆனால், தமிழ்த் தலைமைகள் தொடர்ந்தும் பின்னடைவுகளையும் தோல்விகளையும் சந்திப்பது ஏன்?

தமிழர்களுக்கு வாய்ப்புகளே கிடைப்பதில்லையா? அல்லது அவர்களுடைய வரலாற்றில் தோல்விக்கான பாத்திரத்திற்கே இடமளிக்கப்பட்டுள்ளதா?

அல்லது கிடைக்கின்ற வாய்ப்புகளை அவர்கள் எப்போதும் பயன்படுத்தத் தவறுகின்றனரா? அல்லது வாய்ப்புகளைப் பயன்படுத்த அவற்றுக்குத் தெரியாதா?

இத்தகைய தவறுகள் எதனால், எவற்றால் ஏற்படுகின்றன?

அல்லது தமிழர்களால் தங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கவே முடியாதா?

தாம் கடினமாக உழைத்து உருவாக்கிய வாய்ப்புகளையே அவர்கள் மிக இலகுவாக இழப்பது ஏன்?

இந்த மாதிரியான கேள்விகள் ஈழத்தமிழர்களின் அரசியல் முன்னெடுப்புக்கு இன்று அவசியமானவை. மேலும் இவை கூர்மையாக அணுகப்பட வேண்டியவையும் கூட.

ஏனெனில், ஈழத்தமிழர்கள் இன்று மிகப் பின்தங்கிய அரசியல் நிலைமையிலும் வாழ்க்கை நிலையிலும் உள்ளனர் என்ற யதார்த்தத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

கடந்த நூறு ஆண்டு கால இலங்கையில் தமிழ்த் தலைமைகள் எத்தகைய பாத்திரத்தை இலங்கையின் அரசியலிலும் தமிழ் பேசும் மக்களின் அரசியலிலும் வாழ்க்கையிலும் வகித்துள்ளன? என்று நோக்கினால் இது இன்னும் தெளிவாகப் புலப்படும்.

அதிகம் படித்தவர்களாகவும் ஒரு காலத்தில் சிங்களச் சமூகத்தினராலேயே மதிக்கப்பட்டவர்களாகவும் இருந்த சேர்.பொன் இராமநாதன், அருணாசலம் சகோதரர்கள் தொடக்கம் இன்றைய இரா. சம்பந்தன் வரையில் பலர் இந்தத் தலைமைப் பாத்திரங்களை வகித்துள்ளனர்.

ஆங்கிலேயரிடத்திலும் சிங்களவர்களிடத்திலும் செல்வாக்கும் மதிப்பும் பெற்றிருந்த தலைவர்கள் எப்படித் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாமற் போனார்கள். எப்படி தமிழர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்து நிறுத்த முடியாமல் இருந்தனர்?

'தந்தை' செல்வா, தங்க மூளை ஜீ.ஜீ. பொன்னம்பலம், 'தளபதி' அமிர்தலிங்கம், 'இரும்பு மனிதன்' நாகநாதன், 'அடங்காத் தமிழன்' சுந்தரலிங்கம், தலைவர் பிரபாகரன், இப்பொழுது ஐயா சம்பந்தன் என்று பெருமித அடைமொழிகளோடு கொண்டாடப்பட்ட தலைவர்கள் எல்லாம் இருந்தும் தமிழர்களின் அரசியல் பின்னகர்ந்திருக்கிறதே தவிர, அது ஒரு அடிகூட முன்னகரவில்லை.

எல்லாத் தலைவர்களும் தோல்விக்கும் பின்னடைவுக்குமே தங்களுடைய அரசியல் அணுகுமுறைகளை உருவாக்கி வைத்திருந்தது ஏன்? ஏன் வெற்றியை நோக்கிச் செல்ல முடியாதிருந்தனர்? இன்னும் ஏன் வெற்றியை நோக்கிச் செல்வதற்கு முடியாமலிருக்கின்றனர்?

'சிங்களவர்களை விடவும் தமிழர்களே அதிகம் படித்தவர்கள், அதிக மூளைசாலிகள்' என்று சொல்லிக் கொள்ளும் ஐதீகம் தமிழர்களிடம் பொதுவாகவே உண்டு. ஆனால், இதைச் சொல்லிக் கொள்ள அவர்கள் ஏன் கூச்சப்படவில்லை? இப்படிச் சொல்லிக் கொள்ளவும் கருதவும் கூடிய அடிப்படைகள் என்ன?

தன்னை நோக்கி வருகின்ற அத்தனை நெருக்கடிகளையும் மிக நுட்பமாக வெற்றிகொள்ளும் சிங்களத் தரப்பை ஒரு அவதானமாகவும் பாடமாகவும் கொள்ளுவதற்குத் தமிழ்த் தரப்புத் தவறுவது ஏன்?

பதிலாக, இருக்கின்ற ஆதரவுச் சக்திகளையும் அது எதிர்நிலைக்கே கொண்டு சென்றதையும் ஏன் இன்னும் அது விளங்காதிருக்கிறது?

இந்தியா உள்ளிட்ட வெளித்தரப்புகளையும் உள்ளூரிலுள்ள நேய சக்திகளையும் அது புறந்தள்ளியது ஏன்?

கடந்த நூறு ஆண்டுகால தமிழ்த் தரப்பின் அரசியலில் அது தமிழ் மொழிபேசும் பிற சமூகங்களான முஸ்லிம்களையும் மலையக மக்களையும் எதிர்நிலைக்கே கொண்டு சென்றுள்ளது. இதையிட்ட கவலையைக் கூட அது கொள்ளாதிருப்பது எதற்காக?

அதாவது, மொழி ரீதியாக இருந்த ஒற்றுமையைக் கூடத் தமிழ்த்தரப்புப் பேண முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. பதிலாக அந்தச் சமூகங்களை அரசை நோக்கித் தள்ளுவதையே தமது பிரதான தொழிற்பாடாகவும் அது கொண்டிருக்கிறது.

தமிழ்த்தேசியம் என்ற சொல்லாடல் முன்னிறுத்தப்பட்ட பிந்திய காலத்திற் கூட இந்தப் பின்னடைவு அம்சங்களைக் குறித்த விளக்கங்களை அது பெறாதிருப்பதன் நோக்கம் என்ன?

இந்த மாதிரியான குறை அம்சங்கள் தன்னுடைய எத்தகைய வீரிய மிக்க செயற்பாடுகளையும் பாழக்கிக்கிச் சிதைத்து விடும் என்பதை ஏன் இன்னும் அது உணராதிருக்கிறது?

ஏனெனில், கடந்த நெருக்கடிக் காலங்கள் அத்தனையிலும் ஈழத்தமிழர்கள் பாதிக்கப்பட்டேயுள்ளனர். அந்தப் பாதிப்புகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக வெளிச் சக்திகள் ஆதரவளிக்கவும் இல்லை. உலகம் முழுவதுமுள்ள தமிழர்களால் அது சாத்தியப்படவும் இல்லை.

குறிப்பாகத் தென்னிலங்கையிலிருந்து இனவன்முறை மூலம் தமிழர்கள் விரட்டப்பட்டபோது எவராலும் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அப்போது சிங்களத் தரப்பின் நிகழ்ச்சி நிரலின்படியே அந்த நிகழ்ச்சிகள் இறுதிவரையில் நடந்தன.

பின்னர் யுத்தத்தின் போதும் இதே தான் நிலை. இறுதிவரையில் சிங்களத்தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கே வெளி ஆதரவுகள் கிடைத்துள்ளன.

இறுதிப் போர்க்காலத்திற்கூட சர்வதேச சமூகம் தமிழர்களுக்கு எதிராகவே இருந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் - வன்னியிலுள்ள மக்கள் பகிரங்கமாகவே மரணக்குழியினுள் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தபோது, உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. அதாவது யாராலும் போரைத் தடுத்து நிறுத்தவும் முடியவில்லை. போரிலிருந்து மக்களைக் காப்பாற்றவும் முடியவில்லை.

பின்னர் அகதி முகாம்களிலிருந்த மக்களைக் கூட எந்தத் தமிழராலும் மீட்க முடியவில்லை.

அதற்குப் பின்னர் மீள் குடியேற்றத்தைக் கூட தமிழர்கள் தங்களின் விருப்பத்தின் படியோ ஆலோசனையின் படியோ முழுதாகச் செய்ய முடியவில்லை.

இவை எல்லாவற்றிலும் சிங்களத் தரப்பின் நிகழ்ச்சி நிரலே பிரதானப் படுத்தப்பட்டிருக்கிறது. அல்லது சிங்களத்தரப்பின் நிகழ்ச்சி நிரலே இறுதி வெற்றியாகியிருக்கிறது.

இந்த நிலையிற்தான் தமிழ்த் தலைமைகளின் ஆளுமையும் திறனும் தீர்க்கதரிசனங்களும் தீர்மானங்களும் தந்திரோபாயங்களும் உள்ளன.

தமிழ் அரசியல் அறிவும் ஊடக நிலையும் கூட இந்தப் பின்னடைவுப் பரப்பிலிருந்து விடுபட்டதாக இல்லை.

இப்போது கூட ஒரு அருமையான வாய்ப்புக் கிட்டியது. சிங்களத் தரப்போடு பேரம்பேசக் கூடிய ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது.

இலங்கையின் மீதான போர்க்குற்றங்கள் ஒரு நெருக்குவாரத்தை ஏற்படுத்தியுள்ள சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ் முஸ்லிம் அரசியற் சக்திகளை தனக்குச் சார்பாக வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்காக அது ஒவ்வொரு தரப்பையும் தனித்தனியே கையாண்டுள்ளது.

ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தச் சக்திகள் தங்களிடையே ஒரு பொது நிலைப்பாட்டைக் கொண்டு, ஒரு பொதுத் தீர்மானத்தை எடுத்திருக்கலாம்.

'இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் நிலைமையைக் கருத்திற் கொண்டு செயற்படுகிறோம். ஆனால், தமிழ் பேசும் மக்களுடைய அரசியற் பிரச்சினைகளையும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அரசாங்கம் தீர்க்க வேண்டும்.

அதை இப்போதே செய்ய வேண்டும்.

சிங்களச் சமூகத்தினரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியைப் புரிந்திருக்கின்றனர். எனவே இந்த நிலையில் எல்லாக் காயங்களையும் மறந்து, கடப்பதற்குக் கடினமான நிலையை மன்னித்து ஒரு பொது உடன்பாட்டுக்கு வருகிறோம்.

ஆனால், அதற்குப் பிரதியுபகாரமாக - நீதியாக - நிலைமையை உணர்ந்து இந்த உடன்பாட்டுக்குச் சிங்களச் சமூகத்தை நீங்கள் அழைத்து வரவேண்டும்' என ஜனாதிபதியிடம் தமிழ் பேசும் தரப்பினர் நிபந்தனையை விதித்திருக்க முடியும்.

வாய்ப்புகளைப் பயன்படுத்துவது என்பது புத்திபூர்வமானது. அதேவேளை அதை எட்டுவதற்காக தன்னுடைய நேச சக்திகளை அணுகுவதில் தேவைப் படுவது பெருந்தன்மையாகும்.

*- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்*

இந்த இரண்டு குணங்களும் இல்லாத நிலையே இன்றைய தமிழ்பேசும் சூழலின் யதார்த்தம்.


இது மாலுமி இல்லாத கப்பலுக்குச் சமம்.

துடுப்புகளிருந்தாலும் அதைப் பயன்படுத்தத் தெரியாத எந்தக் கப்பலோட்டியும் ஒரு அங்குலம் கூட முன்னகர முடியாது.

இன்று தமிழரின் அரசியல் அரங்கில் இருப்போர் இரண்டு வகைப்பட்டோர். ஒரு தரப்பு ஆயுதப் போராட்டம், ஆயுதமற்ற அரசியல் வழிமுறை என்ற இரண்டு வழிகளிலும் பயின்றவர்கள். குறிப்பாக திரு. டக்ளஸ் தேவானந்தா, திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன், திரு. செல்வம் அடைக்கலநாதன், திரு. சித்தார்த்தன், திரு. சுகு சிறிதரன், திரு. வரதராஜப் பெருமாள் போன்றோர். அடுத்த தரப்பினர் திரு. சம்பந்தன், திரு. ஆனந்தசங்கரி, திரு. கஜேந்திரகுமார் பொனனம்பலம் போன்றோர்.

ஆனால், தமிழர்களின் கப்பல் என்னவோ இன்னமும் தளம்பிக் கொண்டேயிருக்கிறது. அதற்குத் திசைகளும் இல்லை. போக்கிடமும் இல்லை.

அதில் பழைய பெருமை பேசும் கிழிந்த கொடிகள் மட்டும் ஆடிக் கொண்டேயிருக்கின்றன.



பொன்.இராமநாதன்


பொன்.அருணாசலம்


செல்வநாயகம்



ஜீ.ஜீ.பொன்னம்பலம்


அமிர்தலிங்கம்


பிரபாகரன்


இரா.சம்பந்தன்

# ஆனையிறவு கடல் நீரேரியில் இறால் அறுவடை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு கடல் நீரேரியில் மேற்கொள்ளப்பட்ட இறால் வளர்ப்புத் திட்ட கடற்பகுதியிலிருந்து முதிர்வடைந்த இறால்களைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி கடல் நீரேரியில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் இறால் பிடிப்பதற்கு அப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் இ.ரவீந்திரன தெரிவித்துள்ளார்.

ஆனையிறவிற்கு கிழக்காக உள்ள கடல் நீரேரிப் பகுதியில் இறால் வளர்ப்புத் திட்டமொன்று ''நெக்டா'' நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இக்கடல் நீரேரியில் விடப்பட்ட இறால் குஞ்சுகள் முதிர்ச்சியடைந்துள்ளதனை அடுத்தும், நீரேரியின் நீர் மட்டம் குறைவடைந்து வருவதனையும் அடுத்து இறால் பிடிப்பதற்கு ஆனையிறவைச் சூழவுள்ள எட்டு கடற்றொழில் சங்கங்களுக்கு இப்பகுதியில் இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் 1000 வரையான மீனவக்குடும்பங்கள் நன்மை அடையவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இங்கு பிடிபடும் சுமார் 40 இறால்கள் ஒரு கிலோ நிறை கொண்டதாகவும் இதன் விலை சுமார் 400 ரூபா வரை இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் "மெக்டா" நிறுவனத்தினால் இப்பகுதியில் இறால் குஞ்சுகள் விடப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## விதிகளை மீறிய பயணம் சாரதிக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்கத் தவறிய வாகனச் சாரதிக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ்.நகரப் பகுதியில் நேற்றுப் போக்குவரத்துப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட வழக்கில் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளிக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த உத்தரவிட்டார். (எஸ்)

## கிளிநொச்சியில் எரிபொருள் மானியம் 239 மீனவர்கள் இதுவரை பயன்பெற்றனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 239 கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானிய முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் இ. ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுவரையும் 205 பேருக்கு இம் முத்திரைகள் விநியோகிக்கப்பட்டு விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களுக்கான மானிய எரிபொருளைப் பெற்று விநியோகிப்பதற்கு பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

## ஊழியர் சேமலாப நிதிய பங்குகள் நிறுவனமொன்றுக்கு விற்பனை

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு சொந்தமான நிறுவனமொன் றின் பங்குகள் வெளிநாட்டு நிறுவனமொன்றிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பங்குச் சந்தையில் வைத்து ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆயிரத்து 500 கோடி ரூபா பெறுமதியான பங்குகள் வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு நேற்று விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பங்குகளை எதற்காக வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்தனர், என்பதே இங்குள்ள பிரச்சினையாகும். நாட்டிற்குள் அவசர தேவையின் நிமித்தமே வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அதனை விற்றுள் ளனர். இலங் கைக்குள்ள பாரிய கடன் சுமையை டொலர்கள் மூலம செலுத்த நேரிட்டுள்ளது. முதலீடு குறைந்துள்ள சந்தர்ப்பத்தில் ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள சொத்துக்களை விற்பனை செய்து அதனூடாக டொலர்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இன்று அல்லது நாளை கடன் சுமையை செலுத்துவதற்கும் இந்தச் செயல் முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்

## இறைமையுள்ள...

இல்லாமல் இருப்பது காரணமாக, இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான அழுத்தங்கள் மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால்தான் போர்க் காலத்தில் ...ந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த விஷயங்களில் பொறுப்பு கூறுவது குறித்த பிரச்சினையில் முன்னேற்றம் காண முடியும் எனவும் ஜோன் ஹோம்ஸ் மேலும் கூறியுள்ளார்.

## மனித உரிமைகளைப்...

எமது பிரச்சினைகளை எப்படி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் வெளி நாட்டுச் சக்திகளிடமிருந்து கற்றுக்கொள்வதற்கு எதுவுமில்லை.

அனைத்து இலங்கையர்களும் அவர்கள் வடக்கு, தெற்கு கிழக்கு, மேற்கு எந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஜெனிவாவில் ஏற்படுத்தப்பட்டதைப்போன்ற சூழ்நிலைக்கு எதிராக எழ வேண்டும். நாட்டைப் பாதுகாப்பதற்கு மக்களுடன் கிளர்ந்தெழ வேண்டியது எதிர்கட்சிகளின் கடமையாகும். எதிர்கட்சிகளும், அனைத்து இலங்கையர்களும் அவர்களின் இனம், சாதி, மதம், அரசியல் என்பவற்றை மறந்து விட்டு இத்தருணத்தில் இணைந்து ஒரே மக்களாக இப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்ற வகையில், எமது பிரச்சினைகளை நாம் அனைவரும் ஒன்றிணைந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் சமாதானத்தின் பலன்களை இலங்கையின் அனைத்து பாகங்களிலும் உள்ள மக்கள் அனுபவிக்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## போர்க்குற்ற...

நடத்தப்படவேண்டும் என சர்வதேச சமூகம் வலியுறுத்தி வந்தது. இவ்வாறான விசாரணையொன்றின் தேவையை சனல்-4 காணொளி மீண்டும் வலியுறுத்தியிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்துடன், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நிறைவேற்ற வேண்டும் எனவும் பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது

இலங்கையில் நீதி, நல்லிணக்கம் மற்றும் அரசியல் முன்னேற்றங்களை உறுதி செய்யும் இந்த நகர்வுகளில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

## மனித உரிமைகள்...

தமது நாடு அதனை எதிர்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மனித உரிமை விவகாரம் தொடர்பில் ஜப்பானின் கருத்து வரவேற்கத்தக்கது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்திற்கு காணப்படும் ஆர்வத்தை ஜப்பான் புரிந்து கொண்டுள்ளதாக ஜெனிவாவிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகள் இலங்கையுடன் ஆக்கபூர்வமான தொடர்புகளைப் பேண வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இந்தியாவை தோற்கடித்தது பங்களாதேஷ்



ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரின் 4 ஆவது லீக் போட்டியில் இந்திய அணியை பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

மீர்பூர் நகரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப் பிற்கு 289 ஓட்டங்களைப் பெற்றது. சச்சின் டெண்டுல்கர் 114 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 293 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் வீரர் சகீப் அல் ஹசன் தெரிவானார்.

## சதத்தில்...

டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மொத்தமாக 100 சதங்களை குவித்த உலகின் முதல் வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆவார். அவர் ஏற்கனவே, 188 டெஸ்ட் போட்டிகளில் 51 சதங்களையும் 461 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 48 சதங்களையும் பெற்றிருந்தார். இறுதியாக கடந்த உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவுடனான போட்டியின்போது டெண்டுல்கர் சதம் குவித்தார். அது அவரின் 99 ஆவது சதம் ஆகும்.

அதன்பின் கடந்த ஒரு வருடகாலத்தில் அவர் பல்வேறு ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய போதிலும் தனது 100 ஆவது சதத்தை பெறத் தவறினார். இந்நிலையில் நேற்றுத் தனது இரசிகர்களின் நீண்டநாள் எதிர்ப் பார்ப்பை நிறைவேற்றினார்.

இதுவரை டெஸ்ட் போட்டி களில் 51 சதங்களையும், ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் 49 சதங்களையும் பெற்றுள்ள சச்சின், டெஸ்ட் போட்டிகளில் 65 அரைச்சதங்களையும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 96 அரைச்சதங்களையும் பெற்றுள்ளார்.

இதுவரை சர்வதேசப் போட்டிகளில் அதிக சதங்க ளைப் பெற்றவர்களில் சச்சின் 100 சதங்களுடன் முதலிடத் திலும், அடுத்த இடத்தில் காணப்படும் றிக்கி பொண்டிங் 71 சதங்களோடும், ஜக்ஸ் கலிஸ் 59 சதங்களோடும், பிரைன் லாரா 53 சதங்களோடும் காணப்படுகின்றனர்.

## இ.போ.ச....

அனைத்துப் பேருந்து நிலையங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன. இந்நிலையினை அறியாத பயணிகள் பேருந்து நிலையங்களுக்குச் சென்று ஏமாற்றமடைந்ததுடன், பேருந்து தரிப் பிடங்களிலும் காத்துக் கிடக்க நேரிட்டது.

எனினும், தனியார் பயணிகள் பேருந்துகளும் பெருமளவில் களமிறக்கப்பட்டு பயணிகள் பேருந்துச் சேவைகள் நடைபெற்றன.

இருந்தும் பருவகாலச் சிட்டை வைத்திருந்தவர்கள் உட்படப் பலர் இலங்கைப் போக்குவரத்துச் சேவைப் பணிப் பகிஷ்கரிப்பால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் வேறு வழியின்றி தனியார் பேருந்துச் சேவையை நாடியதனையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் கடந்த 3 நாட்களாக மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று மாலையுடன் முடிவுக்கு வந்தது.

போக்குவரத்து சபை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் 8,030 ரூபாவிலிருந்து 11,730 ரூபாவாக அதிகரிக்கப்படும் என போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திசாநாயக்க எழுத்துமூலம் உறுதியளித்ததையடுத்து இந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. (பா,116)

## போர்க்குற்றத்தில்...

இலங்கையில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர் யாராக இருந்தாலும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டங்களை மீறும் வகையில் செயல்பட்டவர்கள் அதற்காக பொறுப்பேற்க வேண்டும் அதற்காகதான் ஐ.நா.மனித உரிமை கவுன்சிலில் அமெரிக்க தீர்மானம் கொண்டு வந்துள்ளது.

மனித உரிமை விவகாரம் தொடர்பில் ஜப்பானின் கருத்து வரவேற்கத்தக்கது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு காணப்படும் ஆர்வத்தை ஜப்பான் புரிந்து கொண்டுள்ளதாக ஜெனிவாவிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.


மேற்குலக நாடுகள் இலங்கையுடன் ஆக்கபூர்வமான தொடர்புகளைப் பேண வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## தலைக்கவசமின்றி...

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நேற்று பகல் 12.00 மணியளவில் மல்லாகத்தில் இருந்து வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தவேளை பாதைக்கு குறுக்கே வந்த யுவதி ஒருவருக்கு வழிவிட்டுக் கொடுக்க முற்பட்டவேளை மோட்டார் சைக்கிள் தடம் புரண்டது. இதேவேளை, அருகில் இருந்த மின்சாரத் தூணில் மோதி விழுந்தவரை, மோட்டார் சைக்கிளிலின் கால் வைக்கும் பகுதி தலையில் குத்தியதால் அவர் படுகாயமடைந்தார். உடனடியாக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் அங்கு அவர் உயிரிழந்தார்.

# இராணுவத்தின் தாக்குதலில் பிரபாகரன் கொல்லப்பட்டார்

## வீடியோப் பதிவு விரைவில் என்கிறார் இராணுவத் தளபதி



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இராணுவத்தினரின் தாக்குதல்களின் போது கொல்லப்பட்ட நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டார். இது தவிர அவர் படையினரால் உயிரோடு கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டே கொல்லப்பட்டார் என்று சனல் - 4 இன் புதிய வீடியோக் காட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளமையானது முற்றிலும் பொய்யானது. பிரபாகரன் கொல்லப்பட்டதான வீடியோக் காட்சிகள் இராணுவத்திடம் உள்ளன. அதனை வெகு விரைவில் உலகுக்கு வெளிப்படுத்துவோம் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜய்சூரிய தெரிவித்தார்.

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்தில் மீளக் குடியேறிய பொதுமக்களுக்காக இராணுவத்தினரால் வழங்கப்படும் உதவித் திட்டங்கள் குறித்து மேற்பார்வை செய்வதற்காக இராணுவத் தளபதி நேற்று அப்பகுதிக்கு விஜயம் செய்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் பொய்யானவை. இவை இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களாகும். இலங்கைக்கு எதிராக தயாரிக்கப்பட்டுள்ள சனல் - 4 இன் புதிய வீடியோக் காட்சியானது உலகத்தை முட்டாளாக்கும் வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக் கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

இதுவொரு சிறிய நாடு. இவ்வாறானதொரு நாடு யுத்தமொன்றை வெகு விரைவில் முடிவுக்கு கொண்டு வந்ததையிட்டு வெளிநாடுகள் பொறாமைப்படுகின்றன. காரணம், அந் நாடுகளில் ஆயுதங்கள், பணம் உள்ளிட்ட எல்லா வசதிகளும் இருந்தும் இன்னமும் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

அதனாலேயே, எமது நாட்டுக்கு எப்படியாவது அழுத்தத்தைப் பிரயோகித்து நாம் பெற்றுக்கொண்ட வெற்றியை அகௌரவத்துக்கு உட்படுத்த வெளிநாடுகள் முயற்சிக்கின்றன என்றார்.

# ஜெனிவாவில் தாக்கினால் இலங்கை மீது படமாட்டாது

## அமைச்சர் பசில் கூறுகிறார்

(கொழும்பு)

மனித உரிமை பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு ஜெனிவாவில் இலங்கை மீது தாக்குதல் நடத்தினாலும் அது இலங்கை மீது படாது எனவும், இலங்கைக்கு சர்வதேச நண்பர்கள் அதிகரித்துள்ளதால், மேற்குலக நாடுகள் இலங்கை மீது எவ்வாறான பொருளாதார தடைகளை விதித்தாலும் இலங்கைக்கு அவற்றை எதிர்கொள்ளும் பலம் இருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை புதிய ஏற்றுமதி சந்தையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக அரசியல் பிரச்சினைகளில், பொருளாதார விடயங்களை அடிப்படையாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

எனினும் மேற்குலக நாடுகள் அதனை செய்கின்றன. இதன் மூலம் எமது இறையாண்மைக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். இலங்கைக்கு மாத்திரமல்லாது, முழு ஆசியாவின் பொருளாதாரத்திற்கும் அழுத்தங்களை கொடுக்க மேற்குலக நாடுகள் முயற்சிக்கின்றன எனவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# ரயில் முன் பாய்ந்து ஆசிரியர் தற்கொலை



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரின் கூழாவடி பகுதியில் நேற்று அதிகாலை 5.20 மணியளவில் ரயில் மோதி உயிரிழந்தவர் தற்கொலை செய்து கொண்டதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இவர் மட்டக்களப்பு பாடசாலை ஒன்றில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றும் தம்பிலுவிலை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான நடராசா ராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற உதயதேவி ரயில் வண்டிக்கு முன்னால் பாய்ந்து இவர் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேதபரிசோதனை செய்யப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# நெடுந்தீவு கொலை சந்தேகநபருக்கு உச்ச தண்டனை வழங்க வேண்டும்

## நீதிமன்றின் முன் மகளிர் அமைப்பினர் வலியுறுத்து

நெடுந்தீவு சிறுமி படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவரென்ற சந்தேகத்தில் கைதான நபரை விடுதலை செய்ய வேண்டாமெனவும், அவருக்கு எதிராக உச்ச தண்டனை வழங்க வேண்டும், எவ்விதத்திலும் மன்னிப்பு வழங்கக்கூடாதென வலியுறுத்தி சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மகளிர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு அண்மையில் நின்று தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.



இதேவேளை, சிறுமியின் படுகொலைக்கு காரணமானவரென சந்தேகத்தின் பேரில் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர் நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டதுடன், நெடுந்தீவு - ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்ட புலன்விசாரணைகளினது அறிக்கைகளும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து படுகொலை செய்யப்பட்ட சிறுமியின் மரண சம்பந்தமான அறிக்கைகள் நீதிமன்றிற்கு கிடைக்காத காரணத்தினால் சந்தேகநபரை அடுத்த மாதம் 11 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டார். (05)

# அரசின் திட்டமிட்ட செயற்பாடு வன்முறையைத் தோற்றுவிக்கும்

## சர்வதேச நெருக்கடிகள் குழு எச்சரிக்கை

International Crisis Group
WORKING TO PREVENT CONFLICT WORLDWIDE

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் இடம் பெற்ற பகுதிகளில் இராணுவமயமாக்கம் மற்றும் சிறுபான்மை இன தமிழர்களுக்கு எதிரான பாகுபாடு என்பன மீண்டும் வன்முறைகளை தோற்றுவிக்கும் என சர்வதேச நெருக்கடிகள் குழு நேற்று தெரிவித்துள்ளது.

அக்குழுவின் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றுவதன் மூலம் தமிழர் பிரதேசம் என்ற ஒன்று இல்லாமல் போகிறதா எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.


வட மாகாணத்தில் கலாசாரம், பண்பாடு, மக்கள் தொகை மற்றும் பொருளாதாரத்தின் அடிப்படை மாற்றங்களை கொண்டு வருவதன் மூலம் இலங்கை அரசாங்கம் அங்கு வன்முறையை விதைக்கிறது.

வடக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை மாற்றி அவ் இடங்களிற்கு சிங்கள அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளை நியமித்து வருகிறது.

முக்கியமாக வடக்கு, கிழக்கில் போர் நினைவுச் சின்னங்களை அழித்தல், பௌத்த விகாரைகளை அமைத்தல் மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள வீதிகளுக்கு சிங்களப் பெயர்களை வைக்கின்றது.

யுத்தம் முடிவடைந்த பின்னரான இத்தகைய செயற்பாடுகள் மீண்டும் வன்முறைக்கு இட்டுச் செல்வதாக சர்வதேச நெருக்கடிகள் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

# ஜெனிவா பிரேரணைக்கு எதிராக இந்து மதகுரு சத்தியாக்கிரகம்




(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளதை எதிர்த்து முந்தல் பாலையடி பிள்ளையார் கோவில் பிரதம பூசகர் சிவதிரு யோகரட்ணம் சுவாமி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்.

பிரேரணையை எதிர்ப்பதுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் ஆசி வேண்டியும் இதனை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன, சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட முந்தல் பாலையடி பிள்ளையார் கோவில் பிரதம பூசகர் சிவதிரு யோகரட்ணம் சுவாமியை சந்தித்து நலம் விசாரித்தார்.

# யாழ்ப்பாணத்தில் ரணில்



எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. தலைவர்கள் நேற்று இரவு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தேசிய அமைப்பாளர் தயா கமகே, எம்.பி.க்களான ஜயலத் ஜயவர்த்தன, டி.எம். சுவாமிநாதன் ஆகியோரும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினரை ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் வரவேற்றார். ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் மக்கள் சந்திப்புக்களிலும் ஈடுபடவுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.